திவு எண் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை {உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா}

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அடி 1க்கு அ. 12. | |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2. | |
| நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் | |

மாலை 4 | ஈரோடு, விபவ ஞு புரட்டாசி மீ 29 உ. (14—10—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 25



இப்பொழுதுதான் வந்தது!! புதியசரக்குகள்!!

## உறுதியான காண்டி கறுப்புநூல் பெல்ட்டிங்குகள்.

கீழ்கண்ட சரசமான விலைக்கு விற்கப்படும்.

3/16 இன்சு கனம் உள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 2 இன்சு அகலம் | ரூ. | 0—7—0 | ஓர் அடி. |
| 3 ,, | ,, | 0—10—6 | ,, |
| 4 ,, | ,, | 0—14—0 | ,, |

1/4 இன்சு கனம் உள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 4 இன்சு அகலம் | ரூ. | 1—2—6 | ஓர் அடி. |
| 5 ,, | ,, | 1—7—6 | ,, |
| 6 ,, | ,, | 1—12—0 | ,, |

## 26 கேஜ் கலாய் இரும்புத்தகடுகள் அடியிற்கண்ட விலைக்கு விற்கப்படும்:—

| | | | | |
|---|---|---|---|---|
| 6 அடி நீளம் | 33 இன்சு அகலம் | ரூ. | 2—4—0 | ஒரு தகடு. |
| 7 ,, | ,, | ,, | 2—8—0 | ,, |
| 8 ,, | ,, | ,, | 3—0—0 | ,, |
| 9 ,, | ,, | ,, | 3—6—0 | ,, |
| 10 ,, | ,, | ,, | 3—12—0 | ,, |

MASSEY & Co LTD
ENGINEERS

மாஸி அண்டு கம்பேனி (லிமிடெட்)
திருச்சிரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட், கோயமுத்தூர்.

## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ணா எஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

## இனாம்! இனாம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனாம். எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

ஜினேவா வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

## 'திராவிடன்'

இனப்பதிப்பு சந்தா விபரம்.

| | |
|---|---|
| மாதமொன்றுக்கு | ரூ. 1—6—0 |
| சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு | „ 1—0—0 |
| தனிப்பிரதி | 0—0—6 |
| மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு | „18—0—0 |

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.



## அசல் வெள்ளி நகைகளை வாங்குங்கள்.


அசல் வெள்ளியினால் தயார்செய்த அருணாக்கொடி தினுசுகள், கொலுசுகளில் சாதா செயின், முத்து செயின், பட்டையடித்த செயின், ஒட்டியாணம், காப்பு கடகம், மயிர் மாட்டி, பீலி, அருப்பு சங்கிலி, சாவிச் சங்கிலி, கம்மல், தோடு, கடுக்கன், மோதிரம், இதர தங்கம், வெள்ளி நகைகளும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கு கிடைக்கும். விபரத்திற்கு எழுதவும்.

**S. K. மாணிக்கம் செட்டி,**
தங்கம், பவுன், வெள்ளி
நகைகள் வியாபாரம்,
செவ்வாய்பேட்டை, சேலம்,



எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை

## டேபில் டைம்பீஸ் இனாம்!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக் கெடியாரம் வாங்குகி றவர்களுக்குமேஜையின் பேரில்வைக்கக் கூடிய ஒரு அழகான டேபிள் டைம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூர்தங்கள். விலைரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்.

ஜினன் வாட்சு கம்பெனி,
பிண்டு பில்டிங்ஸ்போஸ்டு, மதராஸ்.



அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி
மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் - 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. சாதர்மீரா சாயபு,
ஹெட்சர்சரி தோட்டம், சேலம்.



தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத
'ஆனந்தகுணபோதினி"
ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

# அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜனவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகைதமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, சென்னை.



நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
இதை—சாதனை செய்.

# சுவாச காச ரோக நிவாரணி

## என்னும் ஆஸ்த்மா பௌடர் சிகிட்சை.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும் சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், விஷஜுரம், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் இந்த ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், சாதாரணமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறைபரீக்ஷித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார், திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)



# மதனகாமேஸ்வர லேகியம்.

வீர்யவிர்த்திக்கு நிகரற்றது. உத்திரவாதமுள்ளது.

கிரமமாக சாப்பிட்டுவந்தால் துரித ஸ்கலிதம், சொற்பன ஸ்கலிதம் முதலியன தீரும். தீர்ந்துப்போன இந்திரியம் கெட்டிப்படும். குறைந்துபோன இந்திரியம் விருத்தியாகும். தளர்ந்துபோன நரம்புகள் உரத்துப் பெருத்து முறுக்கேறி ஜனனேந்திரியக் கருவிகள் பருத்துப் பலப்படும். தம்பன சக்தி உண்டாகும்.

20 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் விலை ரூ 2—8—0 தபால்செலவு பிரத்யேகம்.

சித்தவைத்தியசாலை, ஆநந்தநிலையம், திருச்சங்கோடு. S. I.

# ‘நவராத்திரி’ அல்லது ஒன்பது இரவு.

கைவல்யசாமியார் எழுதுவது.

நவராத்திரி என்ற பதம் ஒன்பது இரவு எனப் பொருள்படும். இது புரட்டாசி அமாவாசைக்குப் பின் உள்ள நவமியை இறுதியாக உடைய ஒன்பது நாட்கள் இரவிலும் கொண்டாடப்படும் உத்ஸவம். இது சில வருஷங்களில் ஐப்பசி மாதத்துள்ளும் போகும் அதுபோல இந்த வருஷமும் ஐப்பசி மாதத்திற்குள் போயிருக்கிறது. இந்நாட்களின் ஆரம்பத்தில் எல்லோர் வீட்டிலும் அவரவர்கள் நிலைக்கேற்ப பொம்மைகள், கடவுளின் உருவமான படங்கள் வைத்து ஒவ்வொரு சாயங்காலமும் ஒன்பது நாள்வரையிலும் பாட்டு முதலியவை பாடி ஆலாத்தி முதலியவைகளைச் சுற்றி இந்த உத்ஸவத்தை பெண்கள் கொண்டாடுவது வழக்கம். இதில் புருஷர்கள் கொலு முதலியவைகளைக் கவனியாவிட்டாலும் நவராத்திரியைக்கொண்டாடுகிறார்கள், வேதபாராயணம், சூரியநமஸ்காரம், முதலியவைகளை நடத்த பார்ப்பார்களை ஏற்படுத்தி இந்த ஒன்பதுநாளில் தமது வீடு வேதகோஷத்தால் நிறைந்து மங்களகரமாகும்படியாக செய்யவேண்டுமாம். ஆனால் இந்தவிதி பாப்பானுக்கும அதிகாரம் படைத்த ராஜாக்களுக்கும் பணம்படைத்த வைசியனுக்கும் மாத்திரமாம்; மற்றவர்கள் பக்தியோடு சுந்தரகாண்டபாராயணம் செய்துமுடிந்து பாப்பானுக்கு சாப்பாடு தக்ஷணை கொடுத்து ஆசீர்வாதம் பெறவேண்டுமாம்.

### கொண்டாடும்விதம்

நவராத்திரியில் கடைசிநாளாகிய நவமி தினத்தில் புருஷர்கள் தமது வீட்டிலிருக்கும் புஸ்தகங்களை ஒழுங்காக அடுக்கிவைத்து காலைமுதல் உபவாசமிருந்து சரஸ்வதியைப் பூஜைசெய்யவேண்டும, அந்த நவமி அன்றையத் தினமாவது அல்லது அடுத்த தினமாவது தொழிலாளிகள் ஆயுதத்தையுடையவர்கள் ஆகியவர்கள் தங்கள் தங்கள் ஆயுதங்களை வைத்துப் பூஜைசெய்வது வழக்கம். அதனாலேயே இந்த பூஜைக்கு ஆயுதபூஜை என்றொரு பேரும் உண்டு. இந்த நவராத்திரியை இந்து மதப் பிரிவுகள் என்று சொல்லும் எல்லா மதஸ்தர்களும் கொண்டாடுகின்றார்கள். அன்றியும் சிவ விஷ்ணு ஆலயங்களிலும் இவை பெரும் உத்ஸவமாகவும கொண்டாடுகிறார்கள். அங்கு அம்மனை அலங்கரித்து அநேக தீப அலங்காரங்கள் செய்து ஒன்பதுநாள் இரவும் ஆராதனை நடத்துவார்கள். இந்த வேடிக்கைகளைப் பார்க்கவே அநேகர் மைசூருக்கு போவது வழக்கம். இதனால் கடவுள் பக்தி என்னும் தொழிலையுடைய பாப்பாரும் இவ்வுற்சவத்தால் தங்களுக்கு இலாபம் இருப்பதால் அவர்களே ஊர் ஊராய் நவராத்திரி உற்சவத்தைப்பற்றி விளம்பரப் படுத்துவார்கள். நிற்க, இதை சைவர், சுமார்த்தர், வைஷ்ணவர், மாத்வர் முதலிய எல்லா மதஸ்தர்களும் கொண்டாடக் காரண மென்னவென்றால் கல்வியும் ஆயுதமும் எல்லாருக்கும் பொதுவானதாலும் அதற்கு கற்பிக்கப்பட்ட தேவதையான துர்க்கை, ஸரஸ்வதி, லக்ஷ்மி என்று சொல்லப்பட்டவர்கள் ஒவ்வொரு மதத்தினுடைய தெய்வங்களின் அம்மன்களானதினாலும், இந்த மதஸ்தர்களுக்கெல்லாம் இது சம்மந்தப்படுத்தப்பட்ட புராணக் கதைகளிருப்பதாலுமே துர்க்கை முதலிய அம்மன்களை வைஷ்ணவர்கள் பூசிக்காவிட்டாலும் இது சம்மந்தமான கதைகள் அவர்களிடையுமுண்டு. மற்றவர்கள் சரஸ்வதி பூஜையன்று துர்க்காலக்ஷ்மீ ஸரஸ்வதீப்யோ நம: என்று கூறி பூசை தொடங்குவார்கள்.

### சைவ ஸ்மார்த்த புராணக் கதை

என்னவென்றால், முன்னொரு காலத்தில் மகிஷாசுரன் என்ற எருமை ரூபமான அசுரனும் அவன் பரிவாரங்களும் விருத்தியாகி கடவுள் வரத்தால் சிறந்த பதவியை அடைந்து உலகை இம்சித்துக் கொண்டிருந்ததால் இந்த கஷ்டம் பொறுக்க முடியாமல் தேவர்கள் பார்வதியிடம் முறையிட பார்வதி ஒன்பது நாள் சிவபிரானைக் குறித்து தவமிருந்து அவரிடமிருந்து தகுந்தசக்திபெற்று ஒன்பதாம்நாள் மகிஷாசுரனைக் கொன்று அவன் பரிவாரங்களை நாசம் செய்து சாந்தமடைந்தார். மகிஷாசுரனைக் கொன்றதினால் பார்வதி தேவிக்கு மகிஷாசுர மர்த்தனி என்கிற பெயரும் வந்தது என்பது. எனவே இந்தக் கதையின் ஆதாரத்தைக்கொண்டு அம்மன் தவமிருந்து விழித்த ஒன்பதாம் நாள் வேண்டிய வரங்கள் கொடுப்பார் என்னும் கருத்தைக்கொண்டே இவர்கள் இந்த உத்சவத்தைக் கொண்டாடுகிறார்கள்.

நம்முடைய உத்சவத்திற்கும் மூட நம்பிக்கைகளுக்கும், புராணக் கதைகளுக்கும் பாமரர்களே பங்காளிகள். படித்தவர்களுக்கு இதில் நம்பிக்கை வளர்க்கும் பிரத்தியக்ஷ அனுகூல மிருந்தாலும் கூட இதுபோன்ற கதைகளைப்பற்றிய விவகாரங்கள் எழும்போது “தங்களுக்கெல்லாம்வேறுகருத்தே இதில் பெரியவர்கள் அமைத்திருக்கிறார்கள்” என்று எதற்கும் “தத்துவ” வியாபம சொல்லுவதுபோல் இதற்கும் ஒரு ரகசிய அர்த்த முண்டாம். வேத பாராயணம், கோவிலில் நடக்கும் பூசை, ஆராதனைகள், ஒன்பது நாளும் பார்ப்பானுக்கு போடும் சோறு, அம்மன் விழித்த உடன் செய்யும் தானம் முதலியவைகளால் பாமரர்களுக்கு இகலோக சுகம் சித்திக்க வேண்டுமாம். அதனால் மனம் சுத்தப்பட்டு பின்னால் மோக்ஷத்திற்கு வருவார்களாம். படித்த பண்டிதர்கள் இந்த ஆடம்பரத்தில் சோறும் தக்ஷணையும் வாங்கிக் கொண்டாலும் அவர்கள் சொல்லும் உள்கருத்தென்னவென்றால் மகிஷாசுரன் அவன் பரிவாரங்கள் முதலியவைகள் எனபதை அஞ்ஞானமாகவும், அசுர காரியங்களுமாகவும், பார்வதியை சித்சக்திபாகவும், அது பரம்பொருளாகிய ஆத்ம ஸாக்ஷாத்கார விசேடத்தால் அஞ்ஞானத்தை வேறறுப்பதாகவும் கொள்ளவேண்டுமாம். “துர்க்காலக்ஷ்மீ சரஸ்வதீப்யோ நம.” என்னும் மந்திரத்தை பாப்பானிலிருந்து அம்மனையே பிரதானமாகப் பூசிக்கும் சங்கரமடத்து சாஸ்திரிகள்வரையிலும், மக்களிடமிருந்து கிடைக்கும்வரையிலும் தங்கள் லௌகீக சுகத்திற்காக அவர்களை வேறுக்கிறார்களேஒழிய அவர்களது அஞ்ஞானத்தை வேறறுப்பதாக தத்துவார்த்தம் சொல்லும் சமயவாதிகளெல்லாம் மகிஷாசுரனிடமல்லவா (அதாவது ஆசையில்) மாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

### வைஷ்ணவ மாத்வர்கள் புராணக் கதை

முன்னொரு காலத்தில் லக்ஷ்மி தேவி உலகில் அலமேலு மங்கையாக வந்து பரமபத வாசியாகிய விஷ்ணுவான திருப்பதிபெருமாளை யடைந்து ஆனந்திக்க இந்த ஒன்பது நாள் தவமிருந்தாராம். இதன் முடிவில் அவர் எண்ணம் முற்றுபெற விவாகம் பெரிய ஆடம்பரமாக முடிந்ததாம். இந்த விசேடத்தை முன்னிட்டுத்தான் வைணவ மாத்வர்கள் இந்நாளை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இந்நாட்களில் திருப்பதியில் பிரம்மோத்ஸவம் நடக்கிறது. பிர்மாவின் பத்னியான சரஸ்வதியும் இந்த நவராத்திரியில் தன் நாயகனை அடைந்து நிலைபெற தவமிருந்தாள் என்னும்கதையைக்கொண்டு கடைசி மூன்று நாளும் சரஸ்வதிக்கு முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது. பத்தாம் நாள் விஜய தசமியன்று சரஸ்வதி தவம் முடிந்து சந்துஷ்டியாயிருப்பதால் அன்று வாசிப்போருக்கு கல்வி நன்றாக வருமாம். தொழில் செய்கிறவர்கட்கு காரியங்கள் கைகூடி வருமாம்.

இதை நம்பி நடக்கும் நம்மைவிட மற்ற தேசங்களிலெல்லாம் சரஸ்வதி எந்நாளும் திருப்தியோடுகூடின சந்தோஷத்துடன் இருக்கிறாள். நம் தேசத்தில் வருஷத்திற்கு ஒரு நாள்தான் கண்ணைத்திறந்து திருப்திப்படுகிறாள். இதற்கு காரணம் பாப்பானுக்குக் கொடுப்பது சரியாகக் கொடுக்கப்படுகிறதா என்று பார்ப்பதற்காகவோ அல்லது பூசையின் திருப்திக் குறைவாலோ அல்லது நம்மிடம் ஆயிரமாயிர வருஷமாக வாங்கி உண்ட நன்றி கெட்ட குணத்தை மறைப்பதற்காகவோ அல்லது தன் பாஷையான சமஸ்கிருத இலக்கணத்தை தன் முதற் பிள்ளைகள் மற்ற பிள்ளைகளுக்கு எங்கே சொல்லிவைத்து விடுவார்களோ என்னும் அஞ்ஞானத்தாலோ என்பதை நாம் அறியோம்.

### இன்னுமொரு கதை.

கிரேதாயுகத்தில் சுகேது என்னும் ஒரு அரசன் இருந்ததாகவும் அவன் சத்துருக்களால் அடிபட்டு காட்டையடைந்து காயத்தாலும் பசிப்பிணியாலும் நோய் வாய்ப்பட்டு அவதிப்பட்டதாகவும் அங்கு வந்த அங்கிரஸ் என்னும் ரிஷி அரசன் பெண்ஜாதியான சுவேதிஎன்பவளுக்கு லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி, இவர்கள் செய்த மாதிரி நீயும் தவம் செய்வாய் என்று இந்த பூசையை உபதேசித்ததாகவும் அவ்வாறே அவள் செய்து அங்கிரஸ் என்னும் புத்திரனும் பிறந்து அவன் சத்துருக்களை ஜெயித்து தகப்பனுக்கு ராஜியத்தை வாங்கிக் கொடுத்ததாகவும் சொல்லப்படுகின்றது. நவராத்திரிக்கு இன்னும் இது போன்ற பல கதைகளுமுண்டு இடமில்லாததினால் அக்கதைகளை விட்டு விட்டேன்.

கிரேதாயுகம் முதற்கொண்டு இது நாள்பரியந்திரம் செய்த பூசைகளின் மந்திரங்களும் அதைச் செய்த ஜன சமூகங்களும் நம் நாடும் அதை ஏற்றுக் கொண்ட தெய்வங்களும் நூறுநூறுவருஷங்களாக அந்நியர் படையெடுப்பால் அல்லோலகல்லோலபட்டு வெள்ளைக்கார மந்திரத்தால்வெளியேற்றப்பட்டிருக்கையில் நமது “சரஸ்வதியும் லக்ஷ்மியும் பார்வதியும்” அவர்களுக்குப் பூசையும் அதற்காக பாப்பானுக்குப்பணமும்தக்ஷணையும் எதற்கு என்று ‘குடி அரசு’ கேட்டு விட்டால் சமயவாதியும் சாஸ்திரவாதியும் ‘அது சமயத்தை அடியோடு தூஷிக்கின்றது’ என்று சொல்லுவதானாலும் படித்தவர்கள் என்பவர்களான ஆங்கில சரித்திர சைன்ஸ் பி எ எம் எ வாதிகளுக்கு புத்தியிருக்கின்றதா இல்லையா என்றுதான் கேட்கின்றோம்.

மேலும் விஜய தசமியன்று சிவன் கோயிலில் பரிவேட்டை உத்ஸவம் என்பதாக ஒன்று நடத்துகின்ற வழக்கமுமுண்டு. அன்று பகவான் எழுந்தருளி வன்னி மரத்தில் அம்பு போடுவது வழக்கம். வன்னி மரத்தில் நெருப்பிருக்கிறதாகவும் அதில் அம்பு பாய்ச்சினால் அந்த வேகத்தால் நெருப்புண்டாகி அந்த மரத்தை எரித்து விடுமாம். ஆனதால் வேட்டையாடுவோருக்கும் ராஜாக்களுக்கும் எளிதில் ஜெயத்தைக்கொடுக்குமாம். இந்த காரணத்தால் இந்த வேட்டை தினத்திற்கு விஜயதசமி அதாவது ஜெயத்தைக் கொடுக்கும் நாள் என்று பெயர் என்றாலும் இதற்கும் உள் கருத்துண்டாம். உள் கருத்து வைத்து வைத்து தான் நம் நாடு உள்ளேயே போயிற்று. பாமரர்களுக்கு உள் கருத்து ஸ்தூலமாகவும் படித்தவர்களுக்கு சூட்சுமமாகவும்இருப்பதாகச் சொல்லுகிறார்கள் (எந்த சூட்சுமமும் பாமரர்களைப் படித்தவன் ஏமாற்றவே உபயோகப்படுகிறதே ஒழிய காரியத்திற்கு ஒன்றும் உபயோகப்படுவதில்லை.)

(இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.)

## குருணக்குளம் கோயில் பூசாரியின் அக்கிரமச் செயல்கள்.

சென்றவருடம் மாசிமாதம் கல்லூரணியையடுத்த குருணக்குளம் கிராமம் கோயில் உற்சவத்துக்கு நான்போயிருந்தேன். அன்றிரவு கோயில் "சுவாமி" களையெல்லாம் ஊர்வலம்கொண்டுபோய் வந்தவுடன் மற்ற "சுவாமி"களை மூலஸ்தானம் சேர்த்துவிட்டு துர்க்கையம்மனை மட்டும் வெளியேவைத்து மேற்படியம்மனுக்கு பலிகொடுப்பதற்காக நாலைந்து பெரிய பெரிய கிடாய்களும் மூன்று, நான்கு சிறு குட்டிகளும் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவைகளில் பெரியஆடுகளையெல்லாம் வெட்டிப்பலிகொடுத்தபின் ஒரு சிறுகுட்டியை இரண்டுகோணங்கிகள் உயரத்தூக்கிமோவாயைப்பலமாகப் பிடித்துக்கொண்டார்கள். உடனே கோயில்பூசாரி ஆவேசங்கொண்டு ஓடோடியும்வந்து மேற்படி கோணங்கிகள் தூக்கிப்பிடித்திருக்கும் ஆட்டின் தொண்டையை வெடுக்கென்றுகடித்தார். உடனே அவ்விளங்குட்டி வீரிட்டுகத்த ஆரம்பித்துவிட்டது. இப்படியே ஒருமணிநேரம் ஒன்றரைமணிநேரம் பூசாரி அக்குட்டியை வெறிநாய் கடித்ததுபோல் கடித்துக்கொன்றுவிட்டு மீதமுள்ள இரண்டு குட்டிகளையும் அவ்விதமே கொன்றார். உடனே எனக்கு ஆத்திரமானது பொங்கி "பெரியகிடாய்களை வெட்டினதைப்போல் ஒரேவெட்டாக இவ்விளங்குட்டிகளையும்வெட்டி உங்கள்சுவாமியின் வயிற்றைநிரப்பினால் என்ன? எதற்காக சித்திரவதை செய்யவேண்டும்" என்று கேட்டேன். உடனே அவர்கள் என்மேல் கோபித்து "நாங்கள் இப்படித்தான் சுவாமிக்குப் பலிகொடுப்பது வழக்கம்; இனிமேல் இப்படிசொன்னால் உங்கள்வாய் அழுகிப்போய்விடும்" என்று சொன்னார்கள். பின்பு நான் மேல்நடக்கும் அதிசயங்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதாவது.—

### "பிள்ளைவரம்"

மேற்சொன்னபூசாரி கிடாயின் தொண்டையைக்கடித்து அதினின்றும் வழிகிறரத்தத்தைசாதத்துடன் சேர்த்து பிசைந்து அங்கு பிள்ளைவரத்துக்காக காத்துக்கொண்டிருக்கும் பெண்களுக்கு கொடுத்தார். உடனே அப்பெண்களெல்லாம் அவர்காலில்விழுந்து பச்சைரத்தம் கலந்ததும் துர்நாற்றமுள்ளதுமான அச்சாதத்தை மிகவும் பயபயபக்தியுடன் வாங்கிப்புசித்தார்கள். என்னே! இவர்களின் அறியாமை.

இதற்கு முந்தினவருஷம் எங்கள் ஊரிலிருந்து நான்குபெண்கள் மேற்படி கோயிலுக்குப் பிள்ளைவரத்துக்காகப்போயிருந்தார்கள். அதில் இரண்டு பெண்கள் மேற்படி ரத்தசாதத்தை வாங்கிசாப்பிடாது தூங்கிவிட்டார்கள். மற்ற இரண்டுபெண்கள் மேற்படிசாதத்தை வாங்கி சாப்பிட்டுவிட்டு வந்தார்கள். அன்று ரத்தச்சாதத்தை வாங்கிசாப்பிடாது வந்துவிட்ட இரண்டுபெண்களும் இன்று நல்லகுழந்தைகளைப்பெற்று சுகமேவாழ்கிறார்கள். ஆனால் துர்நாற்றமுள்ள "அருள்பிரசாதத்தை" வாங்கிசாப்பிட்ட இரண்டு பெண்களில் ஒருத்திக்கு குழந்தைபிறந்து இறந்துபோய்விட்டது. மற்றொருத்திக்கோ பாவம் குழந்தையே கிடைக்காமல் போய்விட்டது. எங்கேபோய்விட்டது இச்சாமிகளின் சக்தியெல்லாம்! ரத்தச்சோற்றை சாப்பிட்டவர்களுக்கு பிள்ளை கொடுக்காமலும் சாப்பிடாதவர்களுக்குப்பிள்ளைகொடுத்தும் இருப்பது விந்தையிலும் விந்தையே! என்னே இச்சாமிகளின் வஞ்சகச்செயல்! ஆகையால் அன்பர்களே! சகோதரர்களே! மிஸ். மேயோவை குறைகூறியவர்களெல்லாம் இதற்கென்னபதில் சொல்லுவார்களோ தெரியவில்லை.

ஞா. சி. கணபதி ராமசாமிநாயுடு.

## நிகழப்போகும் புரட்சி.

ஏசுதாசன் "தேசோபகாரி"யில் எழுதுவது.

"மனம் திரும்புகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று ஏசுநாதர் கூறியதையே நானும் இப்பொழுது நினைப்பூட்ட விரும்புகிறேன்.

புரட்சி என்ற சொல்—புரட்டுதல்—மாற்றுதல்—திருப்பிப் போடுதல்—சீர் திருத்தல்—பிழையான மார்க்கத்தை நீக்கி நேரான வழியில் செல்ல முயற்சித்தல்—என்பனபோன்ற பொருள்களின் தாதுவாகும், பாஷையில்மாறுதல், மதவிஷயங்களில் மாறுதல், ஜனசமூகபழக்கம் வழக்கங்களில் மாறுதல் ஆட்சிமுறையில் மாறுதல் ஆகியவைகள் புரட்சியெனறழைக்கப்படுவதே மேல்நாட்டு சரித்திராசிரியர்களுடையபோக்கு. கீழ்நாட்டுசரித்திராசிரியர்களுடைய சித்தாந்தமும் அதுதான்.

அரேபியாவில் முகம்மது நபிசெய்தது மதசம்பந்தமான புரட்சி. ஏசுகிறிஸ்து தோன்றி கிரிஸ்தவமதத்தை புதியவழியில் திருப்பினதும் புரட்சியே. இப்பொழுது துருக்கியிலும், ஆப்கானிஸ்தானத்திலும் அடைந்துகொண்டிருக்கும் மாறுதல்களும் புரட்சியின் பாற்பட்டனவே. ஆதலால் புரட்சியென்பது சட்டவிரோதமானதல்ல புரட்சியென்பது கொலைத்தொழிலைக் குறிப்பதல்ல என்பதை நன்குமனதிலிருத்திக் கொள்வார்களாக.

### மதசம்பந்தமான புரட்சி யாது?

இந்துமதத்திலும், பௌத்த மதம், கிருஸ்தவமதம் இஸ்லாம்ஆகியமதங்களிலும், பூசாரிகளாலும் பாதிரிகளாலும் மூட நம்பிக்கையாளர்களாலும் தற்பெருமை கொண்டவர்களாலும், நடுவே புகுத்தப்பட்டிருக்கிற மூடத்தனமான அனுஷ்டானங்களையும் கொள்கைகளையும் அகற்றும் புரட்சி நடக்கிறது. மதமென்றபெயரைச் சொல்லிக்கொண்டு சிலர் பலரை இழிவுறுத்திவருவதையும், மனித வாழ்க்கையின் வளர்ச்சிக்கு குறுக்கே நிற்பதையும் தடுக்கவே இப்பொழுது "மதப் புரட்சி" ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதுசட்ட விரோதமானதல்ல: சட்டம்என்றால் மனிதர்களால் செய்யப்படுவதை மாத்திரம் குறித்துவிடக்கூடியது. இயற்கைக்கும் அறிவின் நியதிக்கும் மாறுபடாமலுள்ளவைகளேசட்டமாகும். மேலேகண்ட புரட்சிகளெல்லாம் நியதிக்குப் புறம்பானதல்ல.

### சமூகசம்பந்தமான புரட்சியாது?

"நீண்டகாலமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது எங்கள் பாட்டி பாட்டன் இப்படி அனுஷ்டித்தார்கள்" என்று சொல்லிக்கொண்டு உடைஉண், விவாகம், கருமாதி, முதலிய மற்றும்பல சடங்குகளில் காலத்தையும், பணத்தையும், பிரயாசையையும், வீணாகவும், வியர்த்தமாகவும்செலவிட்டு வருவதை மாற்றவேண்டிய சந்தர்ப்பம் வந்திருக்கிறது. அதற்காக பெரும் புரட்சி நடக்கிறது மாமூல் எனறுசொல்லிக்கொள்ளும் பழக்க வழக்கங்களானதுமனிதவர்க்கத்தையே அரித்துத்தின்னுகிறது. ஆதலால் அவற்றை நீக்கவேண்டியதும் மாற்றவேண்டியதும் அவசியமாகும் பிரஸ்தாபப் புரட்சிநீதியின் பாற்பட்டதே யாகும்.

எனவேஇந்த புரட்சிகள் ஆரம்பிக்கப்பட்டு பலவருடங்களாக நடந்துவருகிறது. எனினும் இப்பொழுதுதான் கோரிய—சேரவேண்டிய—இடத்தை அடையப்போகிறது. எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்தப் புரட்சிகள் நடந்துதான்தீரும். அவைகளைத்தடுத்தல் என்பது சாத்தியமில்லை. பூசாரிகளும், எதேச்சாதிகாரிகளும் சுயநலவாதிகளும் அதைத்தடுத்துவிட முடியாது. எதிர்ப்பிரசாரங்களும், பீரங்கிகளும், சிறைத்தண்டனைகளும் அவற்றைத்தடுத்துவிட முடியாது, எவர்வெறுப்பினும் விரும்பினும் நடந்தே தீரப்போகிறது. சூரியன் எவர்விருப்பு, வெறுப்புக்கும் உட்பட்டு எங்கும் தங்கிநிற்பதில்லை. தன் தொழிலைச் செய்துகொண்டுதானிருக்கிறது. உபயோகப் படுத்திக்கொள்ளுகிறவர்கள் உபயோகித்துக்கொள்ளலாம். மனமில்லாதவர்கள் ஒதுங்கிநிற்கலாம். ஆதலால் "மனந்திரும்புகிறவர்கள் பாக்கியவான்கள். மோக்ஷவீடு அவர்களுடையதே" என்று ஏசுகிறிஸ்து கூறியிருப்பதையே மறுபடியும் நினைப்பூட்டுகிறேன்.

## பார்ப்பனர்களின் ஜோதிட கவச ஆசிரமத்துக்கு மோசம் போகாதீர்கள்

பல ஊர்களிலிருந்து ஜோதிட பார்ப்பனர்கள் பல பத்திரிகைகளில் கவசம் ஜோதிடம் என்கிற விஷயத்தை விளம்பரம் செய்து நம் பார்ப்பனரல்லாதார் பணங்களை நூற்றுக்கணக்காய் கொள்ளையடிப்பதுமின்றி நம்மை அவமரியாதையாகவும் நடத்துகின்றார்கள்.

அநேக பார்ப்பனரல்லாத மாணவர்கள் ஜோதிடம், கவசம், வசிகரணி என்கின்றதின்பேரில் நம்பிக்கை வைத்து ஜோதிடம் கேட்டு தற்கொலை முதலிய தீய செயல்களும் செய்துகொள்ளுகிறதாக பத்திரிக்கையில் வாசிக்கின்றோம். ஜோதிடத்திற்கும், கவசத்திற்கும் செலவிடும் நண்பர்கள் "திராவிடன்" "குடி அரசு" பத்திரிகையில் சந்தாதாரராகச் சேர்ந்து சுயமரியாதையை அடையுங்கள். நான் சில பார்ப்பன ஜோதிடர்களை நேரில் போய் பார்த்திருப்பதால் அவர்கள் ஜோதிட கவசத்தின் புரட்டுகளைப்பற்றி நமது பார்ப்பனரல்லாதார்களுக்கு எச்சரிக்கை செய்யாமலிருக்க முடியவில்லை. ஒரு அணா செப்பு தகட்டில் 25 வசிகரணி டையால் அடித்து குச்சிகளை சொருகி வி. பி. யில் அனுப்பிவிடுகிறார்கள். பார்ப்பன ஜோதிட கவச நற்சாக்ஷியங்களுக்கு மயங்கி போய்விடாதீர்கள். பார்ப்பன ஜோதிடர்களின் மதிமோச விளக்கம் என்கிற சிறியதோர் புஸ்தகம் இனாமாக பிரசுரம் செய்து அக்டோபர்-௴ 31-உக்குள் இனாமாய் கொடுக்கப்படும். டை புஸ்தகம் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி பெறலாம்.

எ. எம் சோமசுந்தர முதலியார்,
சுயமரியாதை தொண்டன், அரக்கோணம்.

---

### ஈரோடு டி. மு. கோர்ட்டு.

O S No 126 of 27
E O R No 1071 of 28
E A No 1234 of 28

சின்னப்பகவுண்டன் – வாதி

அங்கமுத்து 1, ராமசாமி 2, மைனர் லக்ஷ்மணன் 3—பிரதிவாதிகள்.

டை மைனரின் Natural கார்டியன் தகப்பன் 1—ம்பிரதிவாதி

டை கெம்பரில் வல நோட்டீசுக்கு உத்திரவாய் கோர்ட்டுமூலம் 3 தபா படிகட்டி சர்வாகாமல் கடைசியாய் 17-10-28 ல் டை நோட்டீசுக்கும் Natural கார்டியன் நோட்டீசுக்கும் வாய்தா ஏற்பட்டிருப்பதால் அது விஷயமான ஆக்ஷேபணை டைதேதியில் பிரதிவாதிகள் நேரிலாவது அல்லது வக்கீல் மூலமாவது ஆஜராய் தெரிவித்துக்கொள்ளாதவரை ஒரு கக்ஷியாய் வாதி உத்திரவு பெற்று மேல் நடவடிக்கை நடத்திக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்திருக்கிறேன்.

ஈரோடு.
3-10-28 } (Sd) M. Venkatachalam
Pleader for Plaintiff

# இந்தியாவில் "பர்தா" (கோஷாமுறை)

## ஒழிக்க வேண்டியது அவசியம்.

### ஓர் முஸ்லீம் மாது கூறுங் காரணங்கள்.

லாயிலாபானூபீகம் என்னும் முஸ்லீம் மாது "இந்தியன் டேயிலிமேயில்" பத்திரிகையில் பின் வருமாறு எழுதுகிறார்:—

பர்தா என்னும் கொடிய வழக்கத்தை ஏற்படுத்தியவர் எவராயிருந்தாலும், எப்பாவமும் அறியாத இலட்சக்கணக்கான பெண் மக்களை மெதுவாய் சாகும்படி தண்டித்துள்ளதிற்கு அவரையே பொறுப்பாய்க் கொள்ளவேண்டும். இந்தப் பர்தா வழக்கம் இஸ்லாம் மதத்திலில்லை. இது நிச்சயமான செய்தியாகும். கடவுளுடைய உபதேசங்களோ அல்லது பொறுப்புள்ள சமூக ஒழுக்க நெறி விதிகளோ உண்மையுள்ள பெண் மக்களுக்குத் தப்பாய் தடையிடவோ அல்லது அறைக்குள் மூடியிருக்கும்படி கூறவோ இல்லை. முகமத் காலத்திலாவது அல்லது அவருக்குப் பின் வந்தார் சிலர் காலத்திலாவது இவ்வழக்கம் இருந்ததில்லை என்பதை சரித்திரம் நன்கு தெரிவிக்கின்றது. இஸ்லாம் மதம் ஒவ்வொரு குற்றத்திற்கும் ஒருவிதமான தண்டனை விதிக்கின்றது. ஆனால், இப்பர்தா வழக்கத்தைக் கைக்கொள்ளாதவர்கட்கு எவ்விதமான தண்டனையும் விதிக்கின்றதில்லை. ஏனென்றால் இவ்வழக்கம் அக்காலத்தில்லாதிருந்ததே அதற்குக் காரணமாகும்.

இவ்வழக்கம் பண்டைக் காலத்தில் பாரசீகத்தில் ராச குடும்பங்களிலும் பெரிய மனிதர்கள் வீடுகளிலும் இருந்து வந்துள்ளது. பிற்காலத்தில் இந்தியாவில் அரசர்களாய் இருந்த முஸ்லீம்களும், சீனர்களும் இதற்கு அருகில் இருந்தமையால் இவ்வழக்கத்தைக் கைக்கொண்டு விட்டதாய் தெரிகின்றது. பின்னர் நாட் செல்லச் செல்ல இது மதக்கொள்கையில் ஒன்றாக வந்துவிட்டது. அதிலும் இந்தியாவில்தான் இது வேரூன்றிய மதக்கொள்கையாகிவிட்டது. இந்தியாவில் பண்டைப் பழக்கங்கள் எவ்வளவு மூடத்தனமானவைகளாய் இருந்தபோதிலும் அதற்கெல்லாம் மதம் அநுமதி கொடுக்கின்றது.

இவ்வாறு மேற்கூறியதில் நான் புதிய இரகசியம் ஒன்றையும் வெளியிட்டு விடவில்லை. இவைகள் சாதாரணமான உண்மைகளாகும். நியாய புத்தியுடைய எல்லா முகமதியர்களும் நான் கூறியவைகளை ஒப்புக்கொள்வர். நான் இந்நாட்டிலுள்ள எனது மதத்தினர்களை ஒன்று கேட்க விரும்புகின்றேன். எவ்வளவு காலம்வரை இப்பழக்கத்திற்கு நீங்கள் அடிமைப்பட்டிருக்கப் போகின்றீர்கள்? உயிருள்ள எல்லாப் பிராணிகட்கும் பிறப்புரிமையான அதிலும் மானிடப் பிறவிக்கு முக்கியமான பிறப்புரிமையான சூரிய வெளிச்சமும் சுகந்த நற்காற்றும் எவ்வளவு காலத்திற்கு எங்கட்கு இல்லாது செய்வீர்கள்.

### துருக்கி வழி காட்டல்.

துருக்கி ஏற்கனவே முகமூடியையும் அறவே ஒழித்துவிட்டது. போய்னியா, ஹாஜி ஹோவினா, அல்பானியா, மற்றைய பால்கன் ராஜ்யங்களிலுள்ள முஸ்லீம் மாதர்கள் வீட்டுக்கு வெளியில் பேருக்கு முகமூடியிடுவதையும் விட்டுவிட்டார்கள். எகிப்து ஓர் வரி உத்தரவினால் இப் பர்தா வழக்கத்தை ஒழிக்கத் தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது. ஆப்கானிஸ்தானும் இதற்காக பாடுபட்டு வருகின்றது. ஏற்கனவே இதற்குப் படியாக சில சீர்திருத்தங்கள் செய்துள்ளது. ஆதியில் இக்கொடிய வழக்கத்திற்கு உற்பத்தி இடமாயுள்ள பாரசீகம்கூட, தனது தற்போதைய அறிவிற் சிறந்த அரசரின் ஆட்சியில் என்றாவது இவ்வழக்கத்தை விட்டுவிடலாம். ஆனால் ஏழை இந்தியா என்று இக்கொடிய வழக்கத்தை விடப்போகின்றதோ!

இந்தியா ஒன்றுதான் வீட்டின் சுவருக்குள் மறைவில் சுற்றித்திரியும் தனது இலட்சக்கணக்கான பெண்மக்கட்கு இவ்வழக்கத்திலிருந்து விடுபட நம்பிக்கை கொடுக்கின்றதில்லை. இந்நாட்டில் முஸ்லீம்கள் அரசர்களாய் இருந்த காலம் வரை இவ்வழக்கம் சரியானதுதான். ஏனென்றால் அரசர்களாய் இருந்த காலத்து அவர்கள் (மேற்கூறிய) பிறப்புரிமை இழந்த தங்கள் மனைவிமார்கட்கு பூந்தோட்டங்களும், பூம்பொழில்களும் மாளிகைகளும் சமைத்துக்கொடுக்க முடிந்தது. அக்காலத்தில் பர்தா தற்காலத்திலுள்ள பிரதி கூலங்களிலிருந்து விடுபட்டிருந்ததோடு அல்லாமல், அது ஒரு பாக்கியமாகவும் கருதப்பட்டது.

### முஸ்லீம்களின் தற்கால நிலை.

இப்பொழுதோ காலநிலை முற்றிலும் மாறியுள்ளது. நாம் அரசாளும் மரபினராய் இருந்தது போக, மற்றையோருக்குப் பிற்பட்டதோர் மரபினராய் இருக்கின்றோம். கல்வி செல்வம், கைத்தொழில் முதலியவைகளில் பிற்பட்ட நிலையில் இருக்கின்றோம். ஆயிரத்தில் ஓர் முகமதியர் கூட தனது குடும்பத்திலுள்ள பெண்டீர்களின் சௌகரியத்திற்குத் தனது வீட்டின் நிலத்தில் சூரிய வெளிச்சமும் சுகந்த நற்காற்றுமுள்ள மைதானம் சமைத்துக்கொடுக்க முடியாது. நாம் வறுமை வாய்ப்பட்டு அறியாமையாலும் வியாதியாலும் துன்புறுகின்றோம். மரபிலும் தாழ்ந்துவருகின்றோம். நகர்களின் நிலைமையோ இன்னும் கேவலமாய் இருக்கின்றது. க்ஷயரோகம் உள்ளிருந்தே எங்கள் இருதயத்தை தின்னுகின்றது. ஒரு பையன் க்ஷயரோகத்தால் மரித்தால் அதே வியாதியினால் ஆறு பெண்கள் மரிக்கின்றனர் என்று கல்கத்தா ஹெல்த் அறிக்கை கூறுகின்றது. இப்பெண்கட்கு பர்தாவினால் மூச்சு முட்டச் செய்கின்றனர் என்றும் அவர் கூறுகின்றார். அவர் கல்கத்தாவில் 10000 பேர்கள் க்ஷயரோகத்தால் எந்தக் காலத்திலும் துன்புறுகின்றனர் என்றும், அது எங்கும் பரவுகின்றதென்றும் அவர் கூறுகின்றார். இன்னும் பம்பாயைப்போன்ற ஜனசெருக்கமுடைய நகர்களில்நிலை எவ்வாறிருக்கின்றதோ? இந்தியா முழுவதிலும் இவ்விதம் எத்தனை பேர் வருந்துகின்றார்கள் என்று யார் கணக்கிட்டுக் கூற முடியும்?

இந்திய முஸ்லீம்களாகிய நாம் கல்வியில் தாழ்ந்தவர்களாய் இருக்கின்றோம். ஒன்றுந் தெரியாத தாய்மார்களால் வளர்க்கப்படும் நாம் வேறு விதமாய் இருக்க முடியாது. எனவே இதில் ஆச்சரியமொன்றுமில்லை. நாம் வறுமையால் துன்பத்திலே வளர்ந்து வருகிறோம். இது இரக்கமற்ற இக்கொடிய வழக்கத்தினால் இயற்கையாய் ஏற்பட்ட பயனாகும். ஒவ்வொரு ஆடவனின் சம்பாத்தியமும் மிகவும் குறைவாய் இருக்கின்றது. மற்றை சமூகங்களில் ஆடவர்போல மாதர்களும் சம்பாதிப்பது போன்று முஸ்லீம் பெண்கள் இந்த பர்தா வழக்கத்தினால் சம்பாதிக்க வழியில்லை.

இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் படிப்பில் உயர்ந்த மற்றைய சமூகத்தினரைப்போல் முன்னேற வேண்டுமாயின் முதலில் இக்கொடிய வழக்கத்தை ஒழிக்க வேண்டும்.

### ஆட்சேபனைகட்குப் பதில்.

இதன் தீமைகளை உணருகின்ற நியாய புத்தியுள்ள மாந்தர்களும்கூட நெடுங்காலமாக கையாளப்பட்டுவரும் இவ்வழக்கத்தை சமூகத்தைப் பிளவுபடுத்தாது உடனே ஒழித்துவிட முடியாதென்று கூறுகின்றனர். இது உண்மையே. ஆனால் வைதீகர்களான துருக்கியர்கள் இவ்விதம் செய்வார்களென்று யாராவது கனவிலும் கருதியிருப்பார்களா? முஸ்லீம் துருக்கிக்கு எது உடன்பாடாய் இருக்கிறதோ அது முஸ்லீம் இந்தியாவிற்கும் உடன்பாடாகவே இருக்க வேண்டும். நமது வியக்கத்தக்க இந்நிலவுலகத்தில் முடியாத காரியமொன்றுமில்லை. ஆப்கானிஸ்தான் மாதர்கள் தங்களை தாங்களே விடுதலைசெய்து கொண்டாரென நீங்கள் விழிவிடுத்துப் பார்க்கலாம். அப்படி பார்க்கும்போது நாமேன் விடுதலை பெறக்கூடாது?

நாம் சங்கங்கள் ஏற்படுத்தவேண்டும். நாம் பத்திரிகைகள் மூலமாயும் மற்றும் பலவழிகள் மூலமாயும் நமது சகோதரிகளை வேண்டவேண்டும். நாம் திட்டமான வழிகள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். நாம் வாதங்களிலோ அல்லது பயனற்ற வெறும் தீர்மானங்கள் நிறைவேற்றுவதிலோ காலங்கழிக்க வேண்டாம். இவ்விதமான வாதங்கட்கும் தீர்மானங்கட்கும் பலத்த சாகோஷம் கிடைக்கும். ஆனால் விரைவில் இவைகள் மறந்துவிடப்படும். மேல்வகுப்பார் தைரியமாய் இதற்குமுன் வருவாராயின் அவர்களின் தாழ்ந்த சகோதரி மார்கள் கட்டாயம் அவர்களைப் பின்பற்றி நடப்பர். நாம் உடனே வேலை செய்யத் தொடங்க வேண்டும். நாம் பரந்த பிரசாரம் செய்வோமானால் கல்வியறிவு பெற்ற நமது மதத்தினர்களில் பெரும்பான்மையோர் நம்மிடம் அநுதாபம் காட்டி நமக்கு உதவியளிப்பது திண்ணம். பின்னர் கல்வி இல்லாதவர்களும் வைதீகர்களும் நம்மை பின் பற்றுவர். வைதீகர்கள் பலர் ஓலமிடவே செய்வர். ஆனால் அவர்கள் ஓலமிடுவதற்கு மதிப்பில்லாது போயுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் அவர்கள் ஓலமிடுவது இறந்து படும்.

சில நாட்கட்கு முன் துருக்கியிலிருந்து வந்த கனவான் ஒருவர் அலிகாரில் பேசிய போது இக்கொடிய பழக்கத்தை ஒழிக்குமுன் நம் பெண்மணிகட்கு முதலில் கல்வி போதிக்கும்படி இந்திய முஸ்லீங்கட்கு கூறினார். அப்படியானால் மற்றைய மதப் பெண் மக்களைப்போன்று நம் பெண்மணிகள் தங்கள் மதத்தை விடாது கைப்பற்ற முடியுமென கூறுகின்றார். இது குதிரைக்கு முன் வண்டியை இழுத்துப்பூட்டுவதாகும் துருக்கியர்களே இவ்விதம்செய்யவில்லை. சுயராஜ்யம் கேட்கும் போது சுயராஜ்யத்திற்கு அருகதையுடையார்களெனக் காட்டும்படி இந்தியர்கட்குக் கூறியக்கால் டவுனிங்வீதியும் இவ்வாதத்தையே தான் கூறியது. தண்ணீரில் இறங்கி

(இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

# பார்ப்பனர் சூழ்ச்சியும் நம்மவர்களுக்கு எச்சரிப்பும்.

(திரு. கி. குப்புசாமி பிள்ளை எழுதுகிறார்.)

சென்னை மாகாணத்தில் எல்லா வகையினும் பொறுப்பு வாய்ந்தவர்களும் பெருந்தொகையினர்களுமான நம்மவர்களுக்கு ஜனத்தொகையில் 100 க்கு மூன்று வீதமான பார்ப்பனர்கள் செய்து வரும் சூழ்ச்சிகளை நமது பத்திரிகை மூலம் பலவாறாக வெளுத்துரைத்து வருகிறதை யாவருமறிவார்கள். ஆனால் பார்ப்பனர்களின் சூழ்ச்சியானது பரம்பரையாக விருந்து வருகிறதென்பது பார்ப்பனர்களால் எழுதப்பட்ட சகல நூல்களிலும் காணக்கிடக்கின்றது. அறியாமை காரணமாகவும், பார்ப்பனர் அதிகாரத்திற்கஞ்சியும் நம்மவர்களிற் சிலர் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை வெளியாக்க முன்னே வராதிருப்பது விசனிக்கத் தக்கதாயினும் நமது சுயமரியாதை இயக்கத்தில் நம்மவர்களில் யாவருஞ் சேர்ந்துழைத்து வருவதைக் காண மகிழ்கிறோம். சென்னை மாகாணத்தில் முதலாவது பார்ப்பனர்களின் சூழ்ச்சியைக் கண்டு பகிரங்கமாக வெளிப்படுத்தியவர் நமது மா பெருந்தலைவர் டாக்டர் நாயர் பெருமானேயாவர். ஆனால் டாக்டர் நாயர் அவர்கள் இது சமயம் நம்மவர்கள் நடுவே வீற்றிருக்கும் பாக்கியம் நமக்கில்லாது போயினும், அப்பெரியார் கூறிய வீரமொழிகளனைத்தும் நம்மவர்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து விட்டனவென்றே கூறலாம்.

### பார்ப்பனரின் முதலாவது சூட்சி.

1910 ம் வருடம் அரசியல் சீர்திருத்தம் வழங்கியதில் சென்னை சட்டசபைப் பிரதிநிதிகளாக இருவரை தெரிந்தெடுத்து ராஜப்பிரதிநிதி சட்டசபைக்கு சேலம் திரு. விஜயராகவாச்சாரியாரையும் ஆந்திர நாட்டு திரு சுப்பிரமணிய பந்துலுவையும் அனுப்பிவைத்தார்கள். இரண்டாவது முறை சென்னை சட்டசபையிலிருந்து டில்லிசட்ட சபைக்கு இரண்டு பிரதிநிதிகள் தெரிந்தெடுத்தனுப்புஞ் சமயத்தில் காலஞ்சென்ற டாக்டர் நாயர் தன்னையுமொருவராக தெரிந்தெடுக்க நின்றதில் பார்ப்பனர்களெல்லோருஞ் சேர்ந்து சூட்சி செய்து டாக்டர் நாயருக்கு விரோதமாக திருவாளர்களான சீனிவாசசாஸ்திரியையும், நரசிம்ம சர்மாவையும் தெரிந்தெடுத்து விட்டார்கள். அதுவுமன்றி சென்னைமாகாண நிர்வாக சபையிலும் பார்ப்பனர்தவிர வேறேயாரையும் தெரிந்தெடுக்காதவண்ணம் பல தந்திரங்களும் செய்ததுடன் பார்ப்பனர்களே சகல உத்தியோகங்களையும் ஏகபோகமாயனுபவித்து- வரலானார்கள் இந்த அநியாயமான செயல்களை அறவே ஒழித்து யாவருக்கும் சமவுரிமை வழங்க வேண்டுமென்று நினைத்து நமது ஜஸ்டிஸ் இயக்கத்தை டாக்டர் நாயர் பிறப்பித்தார். இதற்கு துணையாக நின்ற திரு தியாகராஜ செட்டியாரும்மற்றுஞ் சில கனவான்களுஞ் சேர்ந்து மாகாணமுழுவதும் பரவச் செய்தார்கள். இதுவுமன்றி நமதுமுன்னேற்றத்திற்காக ஜஸ்டிஸ், திராவிடன்எனும்பத்திரிகைகளையு மேற்படுத்தினார்கள். இதனின்றும் பார்ப்பனர்களின் முதலாவது சூழ்ச்சி வெளிக்குத்தோன்றினதும் மகாயுத்தமாரம்பமாகிவிட்டது. அது சமயம் ராஜப்பிரதிநிதி நிர்வாக சபையில் சர்- அலி இமாம் இந்தியர்களின் பிரதிநிதியாகவிருந்து விலகியதும், கவர்ன்மெண்டார் அந்தஸ்தானத்தில் சர். சங்கரநாயரை நியமித்து விட்டார்கள். இதைக்கண்டு மனம் சகியாது பார்ப்பனர்களெல்லோருஞ் சேர்ந்து சர், சங்கர நாயரின் நியமனத்திற்கு விரோதமாகக் கண்டனத்தீர்மானங்களை அனுப்புவித்தார்கள். சென்னை ஐகோர்ட்டு நீதிபதிகளாக நம்மவர்கள் வரமுடியாமலும் சூழ்ச்சி செய்தார்கள்.

### இரண்டாவது சூழ்ச்சி.

மகாயுத்தம் காரணமாக இந்தியர்களுக்கு முன்னைவிட அதிக ராஜீய சுதந்திரமளிக்க வேண்டுமென்று பொதுஜனங்கள் விரும்பினார்கள். இது சமயம் டாக்டர் பெசண்டு தலைமையில் சுய ஆட்சி சங்கமேற்படுத்தி பார்ப்பனர்கள் மீண்டும் நம்மவர்களை ஏமாற்றப்புறப்பட்டார்கள். நம்மவர்களுக்குள்ளே மனோவித்தியாசங்களதிகரிக்கவும் ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாக சென்னை மாகாண சங்க மொன்று ஏற்படுத்தவும் சூழ்ச்சி செய்து நம்மவர்களிற் சிலரை வஞ்சகமாக கைவசப்படுத்திக்கொண்டார்கள். இந்தியாமந்திரிவந்து அரசியல் விசாரணைநடத்திவருகையில் நமது ஜஸ்டிஸ் கட்சியார் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை எடுத்துரைத்து சென்னை மாகாணமசம்பந்தப்பட்டவரையில் நம்மவர்களுக்கு தனியாகப் பிரதிநிதித்துவமளிக்கும் படி வேண்டினார்கள். இதைக்கண்ட பார்ப்பனர்கள் மனஞ் சகியாது நம்மவர்களிற் சிலரை நமது இயக்கத்திற்கு விரோதமாக வரும்படி செய்ததுடன் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் சென்னையிலேற்படுத்தவேண்டாமென்று நம்மவர்களைக்கொண்டே சொல்லும்படிக்கும் சென்னை மாகாணசங்கமென்றை பார்ப்பனர்களும்சேர்ந்து ஏற்படுத்தினார்கள். தங்கள் பிரசாரத்திற்காக 'தேசபக்தன்' என்றபெயரால் ஒருபத்திரிகையுமேற்படுத்திக்கொண்டார்கள். கடைசியாக சீர்திருத்தத்தில் நமக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கினதும் சென்னை மாகாண சங்கம் மறைந்து விட்டது. 'திராவிடனுக்கு' விரோதமாக தலையெடுத்த 'தேசபக்தன்', பார்ப்பனபத்திரிகையான 'சுதேசமித்திரன்' செல்வாக்குக்கு ஆபத்துண்டாகக் கூடிய நிலைமையில் வியாபகமாகவும் பார்ப்பனர்கள் சூழ்ச்சிசெய்து 'தேசபக்தன்' பத்திரிகையை நசுக்கிவிட்டார்கள். இது விபரமெல்லாம் கடைசியாகவெளிவந்த 'தேசபக்தன்' பத்திரிகை இதழ்களில் நன்குணரலாம்.

### மூன்றாவது சூழ்ச்சி.

சீர்திருத்தத்தில் சென்னை மாகாணத்திற்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கினதும் பொதுத்தொகுதியில் எவ்வளவு ஸ்தானங்கள் நம்மவர்களுக்கு ஒதுக்கிவைக்கவேண்டுமென்று தீர்மானிக்க கவர்னர் லார்டுவில்லிங்டன் முன்னிலையிலொரு கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் 100-க்கு 3 வீதம் ஜனத்தொகையுள்ள பார்ப்பனர்களுக்காக 8 பிரதிநிதிகளும் நம்மவர்களுக்காக 8 பிரதிநிதிகளுமாக விஜயஞ்செய்திருந்தார்கள். நம்மவர்கள் விரும்பியபடி ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கமுடியாமற் செய்துவிட்டதுடன் முதலாவது தேர்தலில் நம்மவர்களுக்கு அதிகமாகஸ்தானங்கள் கிடையாவண்ணம் நம்மவர்களுக்குள்ளேயே அதிகபோட்டியுண்டாகும்படிக்கும் பார்ப்பனர்கள் சூழ்ச்சிசெய்தார்கள். சீர்திருத்தங்காரணமாக முதலாவது தேர்தல் ஆரம்பமாகுமுன் ஒத்துழையாமை இயக்கம் நாட்டில் தோன்றியது. ஒத்துழையாமை காரணமாக நம்மவர்கள் சட்டசபையை பகிஷ்கரித்துவிடும்படி வஞ்சகமாக வேலைசெய்தார்கள். ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றிகிடைத்ததும் ராஜீயபார்ப்பனர்கள் மனம் குழம்புத்தனமான வழிகளிலிறங்கிவிட்டதுடன் பார்ப்பனப்பத்திரிகைகளும் நம்மவர்கள்மீது வசைபுராணம் பாடிவந்தன. முதலாவது சட்டசபையில் பார்ப்பனர்கள் சூழ்ச்சிபலிக்கவில்லையாயினும் நிர்வாகசபையிலிருந்த பார்ப்பனப்பிரதிநிதி நம்மவர்கள் முன்னேற்றத்திற்கு தடைகல்லாக விருந்து கடைசியில் வேலையிலிருந்து விலகிக்கொண்டார். இவர் ஸ்தானத்தில்தான் சர். சி. பி. அய்யர் நியமிக்கப்பட்டார். இவர் நிர்வாகசபையில் சட்டமெம்பராக வந்ததும், நம்மவர்களுக்கு விரோதமாக சகலவழிகளிலு மிறங்கிவிட்டார். ஜஸ்டிஸ் கட்சிகளுக்குள்ளே பலசூழ்ச்சிகளும்செய்து இரண்டாவது தேர்தலிலும் நம்மவர்களுக்கு வெற்றிகிடையாதவண்ணம் செய்யமுயற்சித்தார். இரண்டாவது தேர்தலிலும் ஜஸ்டிஸ்கட்சிக்கு வெற்றிகிடைத்ததும் பார்ப்பனர்களுக்கு மனஞ்சகிக்கமுடியவில்லையாயினும் நூதனமுறையில் நம்மவர்களை ஏமாற்ற சதியாலோசனை செய்தார்கள். (தொடரும்

# தரைத்தேவர்.

(முழுத்தறி எழுதுகின்றார்.)

உலகத்திலுள்ள பொருள்களனைத்தையும்உயர்திணை அஃறிணையென இரு பாகுபாடுகளாகச் செய்த இலக்கண நூலார் மக்கள், தேவர், நா(நர)கரை உயர்திணைக்கும் ஏனையவனைத்தையும் அஃறிணைக்கும் எடுத்துக்காட்டுகளாக இயம்பியுள்ளார். அதனால் மக்கள் வேறு, தேவர் வேறு, என்று விளங்குகின்றது. மக்களுளே தேவருமுளரென்பதை உலகவழக்கிற்காண்கின்றோம். வீரம் பொருந்திய மறவருக்கும் தேவரென்பது பட்டப்பெயராக வழக்கிலுளது. ஒழுக்கத்திற் சிறந்த தவமுனிவர்கட்கும் அப்பெயர் வழங்குகின்றது. சீவகசிந்தாமணியாக்கியோர் திருத்தக்க தேவரெனப்படுகின்றார். இவ்விருவகையாருந் தரைமீதுள்ள தேவர்களே. இவர்களன்றி வேறுமக்களும் தரைத் தேவர்களென்று புகழப்பட்டிருக்கின்றனர். அன்னார் யாரெனில் கூறுதும். வேதியர், மறையவர், மறைவாணர், அந்தணர், தீமேவுந்தொழிலார், முத்தழலோர் என்ற பலபெயர்களாற் பெருமை பேணுவோராவர். வேதமொழிவேள்விசெய்பவர் வேதியராவர். மறைகளும் நானடையில் வேதங்களெனப்பட்டன- வண்மைபொருந்தியவர் அந்தணராவர்.

"அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்
வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலால்"

மூன்று வேள்வியிலும் அழலோம்புவோர் முத்தழலோராவர். தரைத் தேவர், மண்மேற்றேவரென்றும், பூசுரரென்றும் அழைக்கப்படுகின்றனர். வண்மையுடையார் வேளாள அந்தணரெனிற் பொருந்தும். இன்மையாற் சென்றிரந்தார்க்கு இல்லை யென்னுதீந்துவக்குந் தன்மையார் வேளாளராவர். அவரே 'வள்ளன்மையால் மிக்கிருக்குந் தாளாள' ரெனப்படுகின்றனர். அங்ஙனமிருக்க பட்டப்பகலில் இச்சகம் பேசி இறைவனருளுவரென்றுகூறி பொருள் பறிப்போர் அந்தணராதலெங்ஙனம்? 'கலங்கவிலா மனப் பெருவண்மையுடைய மெய்யர்' என்பது யாதுபற்றி? 'உழவார்கலையின் கவிதைப் புலவர்க் கொருநாளுங் காவாவண்மைக்கற்றவர்' அவராவரோ? 'காணியொண்பொருட் கற்றவர்க்கீகையுடைமையோ' ரவராவதெங்ஙனம்? ஏற்றலேயன்றி யீகையறவே யொழிந்தவரல்லரோ வினைப்பயனால் தற்காலத்தில் பெரும்பெயராலழைக்கப் படுகின்றனர்.

"தரைத்தேவர் பணிசண்பை"

"மணமருவும் வதுவையொலி
விழவினொலி யிவையிசைய
மண்மேற்றேவர் கணமருவு மறையினொலி
கீழ்ப்படுக்க மேற்படுக்கும் கழுமலமே."

"கொடையுடை வண்மையாளர்
மறையோர்களென்றும் வளர்கின்ற
கொச்சை வயமே."

"கலிகெட அந்தணாளர்கலைமேவு சிந்தையுடையா"

(இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க)

# கண்டறிந்த உண்மை

பட்டுக்கோட்டை
திரு. ரா.சௌரிராஜன் மொழி பெயர்த்தது

ஆயிரக்கணக்கான வருஷங்களாக, மனிதன் பசிப்பிணியைப் போக்கிக்கொள்ளவும் தனக்குவேண்டிய அவசியமான காரியங்களைச் செய்துகொள்ளவும் ஆலோசனை செய்து அறிவை பெருக்கிக்கொண்டான். ஆனால் அறியாமையும், பயமும், தவறுதல்களும் அவனுடைய முன்னேற்றத்தை தடைசெய்தன. அனேக வருஷங்களாக மனிதன் உண்மையைக் காணப் பாடுபடுகிறான். அவன் மதக்குருக்கள்களாலும், மதத்தலைவர்களாலும் ஏமாற்றப்பட்டான். அவன், குருக்கள்களால் கைவிடப்பட்டான். பேய் பிசாசுகளால் பயமுறுத்தப்பட்டான். அரசனால் தண்டிக்கப்பட்டான். "கடவுளால்" அடக்கி ஆளப்பட்டான். கல்வியின் பெயரால் அவனுடைய மனம் அறியாமையில் அழுத்தப்பட்டது. இயற்கைக்கு மேற்பட்டதொரு வழியில் செலுத்தப்பட்டது. மதம் அவனுக்கு அறியாமையையும் அகங்காரத்தையும் போதித்து அன்பையும், வெறுப்பையும் அவசியமானதென்று வற்புறுத்தியது.

ஆனால், உலகம் காலப் போக்கில் மாறுதலடைகிறது. நாம் அநாகரீகமான வேதபுத்தகங்களையும், அர்த்தமற்ற கோட்பாடுகளையும் வெறுக்கிறோம்.

இத்தகைய அறியாமைக் கிடையிலே உண்மையைக் கண்டுபிடிப்பதை விட உயர்ந்த காரியம் வேறொன்றுமில்லை.

உண்மையே மனிதர்களுக்கு உதவும் உயர்ந்த செல்வம்.

உண்மையை நாடுவதே உலகத்திலுள்ள வேலைகளிலெல்லாம் யோக்கியமானது, பயன் தருவது.

உண்மையே முன்னேற்றத்திற்கு முக்கியமான அஸ்திவாரம்; உண்மையே இன்பத்தின் தாய். உண்மை நம்மை நாகரீகர்களாக்குகிறது. மனிதன் இதயத்தில் இருக்கும் அதிஉயர்ந்த ஆசைகளில் முதன்மையானது, உண்மையை அறிந்துகொள்வது. உண்மை மனிதனுக்கு அளவற்ற சக்தியைக் கொடுக்கிறது. மனிதனைக் காப்பாற்றும் சக்தியும் கேடயமும் உண்மையேயாகும், உண்மையை அறிந்த மனிதன் உலகத்தை சீர்திருத்துகிறான்.

ஆலோசனையாலும், அனுபவமான ஆராய்ச்சியாலும் தான் உண்மையைக் காணமுடியும். மனிதன், தன்னாலியன்றமட்டும், ஆராய அனுமதிக்கப்படவேண்டும். ஒவ்வொன்றும் அவனுக்குத் துணைசெய்யவேண்டுமே யல்லாது ஒன்றும் அவனைத் தடைசெய்யலாகாது. அறிந்துகொள்ள முடியாத விஷயம் ஒன்றும் இருக்கக்கூடாது. ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே ஆராய்ச்சி செய்யவும் தனது உள்ளத்தில் பட்டதை வெளியிடவும் அனுமதிக்கப்படவேண்டும்.

எவனொருவன் ஆராய்பவனை பயமுறுத்துகிறானோ அவன் ஜனசமூகத்துக்கு விரோதி.

மனிதனிடமிருந்தும் "கடவுளிடமிருந்தும்" சுதந்திரம்பெற்றால்தான் நாம் ஆராய முடியும். ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே உண்மையாக இருக்கவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனது மனமார ஆராய்ச்சி சாலையில், உலகிலுள்ள பல்வேறு கொள்கைகளை ஆராயவேண்டும். அவன் ஆராய்ந்தறிந்த உண்மையே அவனுக்கு வழிகாட்டியாயிருக்கவேண்டும்.

உண்மையை நேசிப்பதே உன்னதமான குணம். உண்மையை நேசிப்பதே மனுஷத்தன்மையாகும். உண்மையை நேசிப்பதே சுதந்திரம் அடைவதற்கான ஒரு சிறந்த வழியாகும். கோவில்களுக்கும், குருக்கள்களுக்கும், 'கடவுள்க'ளுக்கும் பயப்படுவது அடிமையாவதற்கு வழி தேடுவதாகும். ஆராய்வது ஒவ்வொருவருக்கும் அவசியமாயிருப்பதோடு, அது அவர்களின் கடமையாகவுமிருக்கிறது. ஆராய்ச்சியை அவன் பொன்னேபோல் போற்றவேண்டும். விருப்பு வெறுப்பற்ற தன்மையில் இருந்துகொண்டு அவன் ஆராயவேண்டும். உண்மையை கண்டுபிடிப்பதே அவனுடைய முக்கியமான நோக்கமாகவிருக்கவேண்டும். ஆலோசித்துப் பார்ப்பானானால் உண்மை தவறான வழியில் செல்லாதென்பதை அவன் அறிந்துகொள்வான். அவன் பழமை என்பதற்காகவோ, பழக்கம் என்பதற்காகவோ ஒன்றும் கவலைப்படக்கூடாது. அறிவிற் பட்டதையன்றி வேறொன்றையும் அவன் நம்பக்கூடாது. அவனுடைய உலகத்தில் அவன் அதிபதியாயிருக்கவேண்டும். அவனுடைய அரசாங்கத்திலிருந்து அவன் பேய் பிசாசுகளையும், கடவுளையும் விரட்டியடிக்கவேண்டும்.

அகங்காரம், ஆணவம், வெறுப்பு, பயம் ஆகியவைகளெல்லாம் உண்மையின் விரோதிகள். உண்மையாக ஆராய்பவன், பழமையானதென்பதற்காகவே பழமையை போற்றமாட்டான். புதுமையானதென்பதற்காகவே புதுமையை வெறுக்கமாட்டான். இறந்துபோய் விட்டார்களென்பதற்காக அவன் அவர்களின் கொள்கையை போற்றமாட்டான். உயிருடன் இருக்கிறார்களென்பதற்காக அவன் இவர்களின்கொள்கையை வெறுக்கமாட்டான். கருத்தை நோக்குவானே யல்லாது அவன் கர்த்தாவைக் கவனிக்கமாட்டான். உண்மையற்றவர்களுக்குத்தான் வெளிவேஷம் வேண்டும். உண்மையற்றவைகளுக்குத்தான் உலகத்தில் மெஜாரிட்டி இருக்கும். உண்மையான ஒருவனுக்கு, உள்ளதை ஒளிக்காமல் சொல்லுகிறவனுக்கு உலகத்தில் மெஜாரிட்டி இருப்பதில்லை. அவர்கள் உண்மையென்று படுவதை நம்புகிறார்கள். அவர்கள் பிறருக்காகவாவது, முன்னோர்களுக்காகவாவது, பழக்கவழக்கத்துக்காகவாவது ஒன்றையும் நம்புவதில்லை. ஒவ்வொரு வழியிலும் அவர்கள் உண்மையை தேடுகிறார்கள். உண்மையைக் கண்டால் ஆநந்தத்தோடு அதை வரவேற்கிறார்கள். இந்த உண்மைகளை அறிஞர்களும் யோக்கியர்களும் அநுசரிக்கிறார்கள். ஏனெனில் அதைவிட வேறொருவழி அவர்களுக்கில்லை. ஒவ்வொரு துறையிலும் மனிதன் உண்மையையே நாடுகிறான். இறந்த காலத்தில் நடந்த தவறுகளை எதிர்காலத்தில் நடவாமல் தடுப்பதற்காக ஒரு அரசியல் வாதி உலகசரித்திரத்தை வாசிக்கிறான். ஏனெனில் அவனுடைய தேசத்தைக் காப்பாற்ற அவன் உலக உண்மையை அறிந்துகொள்ள நாடுகிறான்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய உண்மையான எண்ணங்களை வெளியிட தைரியமிருக்கவேண்டும். இவ்வித தைரியமே ஒருவனை உண்மைத் தியாகியாக்குகின்றது. யார் உண்மையான எண்ணங்களை வெளியிடாமல் தடுக்கின்றார்களோ அவர்கள் உண்மைக்கும் நாகரீகத்துக்கும் விரோதமானவர்கள், தனது எண்ணத்தை மட்டும் வெளியிடுவதில் சுதந்திரம் கொண்டாடி அச்சுதந்திரத்தை பிறருக்கு மறுப்பானாகில் அவனைவிட அயோக்கியன் வேறொருவருமில்லை. சில கொள்கைகள் தெய்வீகம் பொருந்தியவையென்றும் அவைகளை ஆராய மனிதனுக்கு உரிமை இல்லையென்றும் சொல்லுவது சரியல்ல. அவைகள் தெய்வீகம் பொருந்தியதென்பதை அவர்கள் எவ்வாறு அறிந்தார்கள். அநேக ஆண்டுகளாக பேச்சு சுதந்திரம் "கடவுளுக்கு" இன்னலை விளைத்து வந்தது. அக்காலத்தில் உண்மையைச் சொல்லுவதை விட பெருங்குற்றம் வேறொன்றுமில்லை அநேக வருஷங்களாக அறிஞர்களின் வாய் அடைபட்டிருந்தது. ஆண்மையுடன் ஒளிவீசி கிளம்பிய இயக்கம் இரத்தத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்டது. உண்மை சுதந்திரத்தைநாடுகிறது. சுதந்திரம் எப்பொழுதும் ஆராய்ந்தறியச் சொல்லுகிறது. சுதந்திரம் ஆராய்ச்சி ஆகிய இவைகளின் உதவியால்தான் உண்மை நிலைநிற்கிறது. உண்மை களங்கமற்ற தன்மையையே விரும்புகிறது. உண்மை அகங்காரத்தையும் ஆணவத்தையும் அடக்கி அறிவின் ஆராய்ச்சியைப்பெருக்குகிறது. உண்மை மனிதனை ஒளிந்துவாழச் சொல்லவில்லை. உண்மை அறியாதவர்களின் வணக்கத்தையும் பயந்தவர்களின் பிரார்த்தனையையும் விரும்பவில்லை. உண்மை ஒவ்வொருவருக்கும் "ஆராய்ந்துபார்" என்று சொல்லுகிறது. இப்படி அநுபவிக்கும் சுதந்திரத்தை நீங்கள் அநுபவியுங்கள். உண்மையை வெளியிடும்படியான தெய்வீகத் தன்மையை அடையுங்கள்.

நாம் ஏன் உண்மையைப் பின்பற்றவேண்டும்? நாம் எதற்காக ஆராய வேண்டும்? நாம் ஏன் யோக்கியனாக விருக்க வேண்டும்? நாம் எதற்காக உண்மையான எண்ணங்களை ஒளிக்காமல் வெளியிடவேண்டும்? இவைகளுக்கு நாம் ஒரு பதில் தான் கூற முடியும். ஜன சமூகத்தின் நன்மைக்காகவே அறிவு விருத்தியடையவேண்டும். உலகம் ஆராயவேண்டும். பேச்சு சுதந்திரம் வேண்டும். பேதைமை ஒருகுணமல்லவென்பதை உலகம் அறிந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய வழிகளால் மனிதன் இயற்கையை வெல்ல முடியும். பிணியைப் போக்கமுடியும், துன்பத்தை நீக்க முடியும், இவ்வுலக வாழ்க்கையை இன்பமானதாகச்செய்ய முடியும். குடியிருக்க வீடும், உடுக்க உடையும் உண்ண உணவும் அனுபவிக்க, சுகபோ

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க).

# "இந்தியமாதா"

திரு. அய்யாமுத்து எழுதுவது;

விபசாரம்.

என்ற தலைப்பின்கீழ் இவ்வமரிக்க அம்மை மிஸ். மேயோ கூறுவதின் சாரமாவது:—

"இந்தியர்வின் சிலபாகங்களில், முக்கியமாக சென்னை மாகாணத்திலும், ஒரிசா பிரதேசங்களிலுமுள்ள இந்துக்கள், ஏதோசில தேவதைகளை திருப்திப்படுத்தும் பொருட்டு தங்களுக்குப்பிறக்கும் பெண்குழந்தைகளிலொன்றை கோயிலுக்கு 'கடவுளின் பொருட்டு கொடுத்துவிடுகிறோம்' என ஒருபிரார்த்தனைசெய்துகொள்வதுண்டு. இக்குழந்தைகளுக்கு நாட்டியமும் சங்கீதமும் கற்பிக்கப்படுகிறது. இவர்கள் பூஜாகாலங்களில் கோயிலில் நாட்டியமாடுவார்கள். கோவிலைச்சுற்றிலுமுள்ள தெருக்களில் வசிப்பார்கள். குருக்களுடனும் இதர பக்தர்களுடனும் சுகிப்பார்கள். இவ்வாறு கடவுள்வியபிசாரம் செய்யும்பெண்கள் சேர்ந்து "தேவதாசிகள்" என்ற சமூகமாய்விட்டது"

இதில் தேவதாசிகள் உற்பத்திவரலாறு இவ்விதமல்ல "அவர்கள் இந்திரனுக்குப்பிறந்தவர்கள். பிரமாவுக்குப் பிறந்தவர்கள் சுப்ரமணியனுக்குப் பிறந்தவர்கள்" என்றிவ்வாறாக ஏதேனுமொன்றை உங்கள் குலப்புராணங்கள் கூறலாகும். அதைப்பற்றி எமக்கு கவலையில்லை. இவ்விதமான ஒரு சமூகம் உங்கள்மதத்தின் பெயரால் தற்போது நிலைபெற்றிருக்கின்றதல்லவா? லட்சக்கணக்கான பெண்கள் மேகரோக களஞ்சியங்களாக பொட்டிட்டுமினுக்கி வர்ணச்சேலையுடுத்திசலங்கைகட்டி உங்கள் தெய்வீகத்தன்மை பொருந்தியபஞ்சமசகோதரர்செல்லவொண்ணாத, நாடார்பெருமக்கள் அருகவொண்ணாத, ஈழவப்பெருங்குடிமக்கள் எட்டவொண்ணாதபக்திபொழியும் மூர்த்திகள்முன்புநடனமாடி நல்லிளஞ் சிங்கங்களைதம் வயப்படுத்தி மேகரோகந்தந்து அவர்தம்வாணாளைவீணாக்கி அவர் உடலில்ஊறிய ரோகத்தை அவர்தம் இல்லாளுக்கும் உடனேற்றி உங்களாண்டவன் பெயரால் அல்லல்படுவதை நீங்கள் அறியீர்களா? இதையெடுத்துச்சுட்டிக்காட்டி உங்கள் தெய்வங்களை நாணமுறச்செய்த ஸ்ரீமதி மேயோவுக்கு ஒரு பொன்சிலை நாட்டினும் தகுமோ தகாதோ கூறுங்கள்!

பொட்டுக்கட்டும் வழக்கத்தை நிறுத்த டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் மசோதா கொண்டுவந்தவுடன் உங்கள் சாமிகள் கூத்தாடவில்லையா? உங்கள் சாஸ்திரிகள் ஓலமிடவில்லையா? உங்கள் மூர்த்திகள் ஊளையிடவில்லையா? "இன்று தேவதாசிகளின் திருப்பணிவேண்டாமென்பீர், நாளை அர்ச்சகர் ஆகாதென முயலுவீர். ஆதலால் நாங்கள் எவ்விதமான மதசீர்திருத்தத்திற்கும் சம்மதியோம்" எனக்கூறவில்லையா? உங்கள் சண்டாளப்பார்ப்பனத்தரகர்கள்! செங்கான்பஜார்த்தாசிகளை வயப்படுத்திஉங்கள் காங்கிரஸ் தலைவர்களான மைலாப்பூர் பார்ப்பனர்கள் தாசிகள் கைச்சாத்திட்ட விளம்பரங்களில் முத்துலட்சுமித்தாயாரின் மசோதாவைத் தாக்கவில்லையா? நண்பர்களே யோசியுங்கள். இந்தியவியபசாரத்தைப்பற்றிப் பறைசாற்றியமிஸ் மேயோவை தூற்றினீர்களே! கடவுளின்பேரால் மதத்தின்பேரால் வீழ்ந்துகிடக்கும் சோதரிகளை மீட்கும் முயற்சியில்எதிர்நின்றுபோராடும் இப்பார்ப்பனத்தரகர்களை என்செய்வது? கூறுங்கள்!

"அமெரிக்காவை விடவா இந்து விபசாரம்! பிக்காடலிபார்க்கில் இல்லாத ஊழல்களா இங்கே? நாங்கள் அடக்கமாக வீட்டினுள்ளே வியபசாரம்செய்கிறோம், உங்களைப்போல தெருக்களிலும் சாலையோரங்களிலும், நந்தவனங்களிலும் அலைந்துதிரிவதில்லையென்றார்" நம்நாட்டு வீரசிகாமணியொருவர். இவர்கூறியது மேயோவுக்குஏற்ற பதிலென்று பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் எழுதின.

ஆனல் எந்நாட்டிலும் இராதநவீன வியபசாரம் ஒன்று இந்தியாவின் சிலபாகங்களில் உள்ளதாக மேயோ கூறியிருக்கிறார். அதாவது ஆண்பையன்களை வாலிபர்கள் புணர்வதாகும். அது இல்லவே இல்லையென ஒருவர் "சவுக்கடி" அடித்தார். வடநாட்டின் பழக்கம் எனக்கு சரியாகத் தெரியாது; ஆனல்வடநாட்டில் இது நிகழ்வதாக மேயோ கூறியிருக்கிறார். இவ்வமரிக்கமாதை யான் கண்டிருப்பேனாயின் இன்னுமோர் பெரியபாரதம்எழுதச்செய்திருப்பேன். இச் "சவுக்கடி"யடித்தவராவது என்னோடு மலையாளத்திற்குபுறப்படட்டும். பையன்கள்வாலிபர்களுடைய மோகதாகத்தை எவ்வளவு எளிதாகத்தீர்த்து விடுகிறார்கள் என்பதை இவர் கண்ணாரப்பார்க்கலாம். "எந்தா முதலாளி ஒருமுக்கால் தாட்டே" என்பான் ஒரு சிறியபையன் உமதுவீட்டு வாயிலின் முன்புவந்து. உடனே முதலாளி அப்பையனை வீட்டினுள் அழைத்துச்சென்று அப்பையனின் சோறுதின்னும் வாயை-தண்ணீர் குடிக்கும்வாயை—கடவுளை வழுத்தும் வாயை, கவிபாடும் வாயை-மனோவெழுச்சிகளையும் அறிவின்ஆற்றல்களையும் வெளிப்படுத்தும்வாயை பெண்ணின் மர்மஸ்தானமாகப் பயன்படுத்திக்கொள்வார். இவ்வளவுபச்சை கொச்சையாக எழுதாமல் தீராது- இதை நீங்கள்பரீட்சித்துப் பாருங்கள். யான்பரீட்சித்தபின்பே இதை எழுதுகிறேன் ஆனல் நான் முற்கூறியமுதலாளியைப்போல் அனுபவிக்கவில்லை- அவ்வழக்கம் தமிழ்நாட்டில் இல்லாத காரணத்தால் தான் எனதுமனமொப்பவில்லை. யானும் மலையாளத்தில் பிறந்து வளர்ந்திருப் பேனாயின் அது சர்வசாதாரணமாகவேஎனக்குத் தோன்றியிருக்கும். திருவனந்தபுரம்ஜெயிலில்ஒருபுதுக்கைதிவந்தான். ஆனல் அவன்கருப்புத்தொப்பிக்காரன். அவன் நானிருந்த அறையின்பக்கத்தறையில் ஏழு தினங்களிருந்தான்- அவன் வந்தமறு தினமே கைதிகளிற் சிலர் அவனுக்கு ஒருவன் எண்ணை கொடுப்பதும், ஒருவன ரொட்டி கொடுப்பதும், ஒருவன் காபி கொடுப்பதும், ஒருவன் முறுக்கான்கொடுப்பதும், ஒருவன பீடி கொடுப்பதுமாக அடிக்கடி வந்து அவனை உபசரிப்பார்கள். எனக்கே ஒரு அதிசயமாயிற்று- அப்பையனை மெள்ளக்கூப்பிட்டு சந்தோஷமாக சில நேரம் வார்த்தையாடிய பின்னர் "உன்னையேன் இவ்வளவு பேர் நேசிக்கிறார்கள்' என்று கேட்டேன், "அதற்கவன் நானிந்த ஜெயிலில் முன்பு பல தடவையிருந்திருக்கிறேன், ஆதலால் அவர்கள் எனக்குச் சினேகமானவர்கள்" என்றான். "இருந்தால் என்ன - எத்தனையோ பேர் அவ்விதம் பழகியிருக்க உன் மீது மட்டும் அவர்களுக்கு அதிக வாஞ்சை ஏற்படுவானேன்" என்று கேட்டேன். உடனே அவன் அந்தப்பக்கமும் இந்தப்பக்கமும் சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு என்னை நோக்கி தனது வாயில் ஒரு விரலைவைத்தாட்டிக் கொண்டு "இந்த வேலையில் "முடுக்கன்" ஆதலால் தான் அவர்கள் என்னைத்தேடி வருவது" என்றான். எனக்கு ஒன்றும்விளங்கவில்லை. வார்டரைக் கூப்பிட்டு விபரமாகக் கேட்டேன். அவன் விபரப்படுத்தியதும் திகைத்துப்போனேன். இதைமறுநாள் ஜெயிலரிடமும் கேட்டேன். அவரும் நகைத்தார். விடுதலையடைந்த பின்பு நான் சென்ட்ரல் ஜெயிலில்துர் அவஸ்த" என்றதலைப்பிட்டு மலையாளபத்திரிகையில் இதைப்பற்றி எழுதினேன். எல்லாரும் மறுக்கவில்லை. இதுமலையாள நாடெங்கும் நாடோறும் நடைபெறும் ஒரு "சிக்கன போக முறை"! "சோயில்லை, கொடியில்லை- காலணா செலவில் மிருக இச்சை தீர்ந்து விடும்" என்கிறார்கள்- மலையாளத்தில் நடைபெறும் எல்லையற்ற சிக்கன முறையில் இது வொன்று. இதைப்பற்றி வளர்த்திக்கொண்டு போனால் எட்டிலடங்காது- நீங்களும் படிக்கப்படிக்க களைப்படைந்து விடுவீர்கள்.

எப்பவோ ஒருகாலத்தில் பஞ்சபாண்டவர் இருந்தார்கள். அவர்கள் ஐவரும் ஒரு மனைவியுடன் சுகித்தார்கள. அம்மாது சிரோன்மணி பதிவிரதைப் பட்டம் கொண்டவர், இது மகாபாரதக் கதை. ஒருவர் நம்பலாம்-மற்றொருவர் மறுக்கலாம்-ஆனல்நமதுசவுக்கடிப் பார்ப்பனர் இன்று மலையாளம் சென்று பார்க்கட்டும், அங்கு கணக்கற்ற "பஞ்சபாண்டவர்கள்" துரோபதை போன்ற மனைவியுடன் வாழுகிறார்கள், இது மலையாளத்து சிக்கனம். "கல்யாணச்செலவுஒன்று-குடும்பப் பெருக்குஇல்லை, செலவுமில்லை." இந்த சிக்கனவாழ்வு மேயோவுக்குத் தெரியாது- ஆனல் இதற்கு உங்கள் பாழான மதமும், புராணக்குப்பையும் இடந்தருகிறது. பெண்கள் வதைக்கப்படுவது இம்மட்டோ! அவர்களின் கேவல நிலைமையை அடுத்தவாரம் எடுத்தாள்வோம். என்மீது கோபப்படாமல், விஷயங்களை நன்கு அறிந்து, சமூகத்தை மேம்படுத்த முயலவாருங்கள்.

## விழுப்புரம்

### தெ- இ- ஆதிதிராவிட சபை

இச்சபையின் மூன்றாவது மகாநாடு திருவாளர் ராவ்சாகிப் எம்- சி- மதுரைபிள்ளை அவர்கள் தலைமையில் 15—10—28 தேதி மாலை 4-மணிக்கு விழுப்புரத்தில். நடைபெறும் ; அதுகாலை அன்பர்கள்யாவரும் விஜயம் செய்ய வேண்டுகிறோம்-

காரியதரிசி

# தீபாவலிப் பண்டிகையும் நமது மூடத்தனமும்.

சாமி. சிதம்பரனார் எழுதுவது.

இந்துக்கள் என்பவர்கள் கொண்டாடும் பண்டிகைகளில் தீபாவலிப் பண்டிகையும் ஒன்றாகும். இதுவும் இந்து மத வழக்கத்தில் ஒன்றாகும். ஒவ்வொரு பண்டிகைக்கும், ஒவ்வொரு புராணக்கதை கற்பிக்கப்பட்டு இருப்பதையாவரு மறிவோம். அவ்வாறே தீபாவலிக்கும் ஒரு புராணக்கதையைச் சுருங்கக் கூறி முடித்து விட்டு அதன் பின்னர் நமது எண்ணத்தை வெளியிடுகின்றோம்.

இரண்யாட்சதன் பூமியைப்பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலில் ஒளிந்து கொண்ட பொழுது, திருமால் பன்றியுருக் கொண்டு வந்து இரண்யாட்சதனைக் கொன்று பூமியை நிலைக்கச்செய்தாராம். அப்பொழுது பன்றியுருவோடிருந்த திருமாலை, பூமி தேவி மணம் செய்து கொள்ள விரும்பினளாம். உடனே பன்றியும் பூமிதேவியும்திருமணம் செய்து கொண்டார்களாம். அவ்விருவர்களுக்கும் ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு நரகாசுரன் என்று பெயர். இவன் மாகிஷ்மதி என்னும்பட்டணத்தை அரசாண்டு கொண்டிருந்தான். துவஷ்டாவின் பெண்ணாகிய கசேரு என்பவளை இவன் ஒரு யானை உருவத்துடன் சென்று சிறைபிடித்துக் கொண்டு வந்து மணம் செய்து கொண்டனனும். இவன் காசிபரின் மனைவியாகிய அதிதியென்பவளின் காதணியையும், வருணனுடைய குடையையும் கவர்ந்து கொண்டனனும். அன்றியும் எப்பொழுதும் தேவர்களுக்குப் பெரும்இடையூறுகளைச் செய்து கொண்டே யிருந்தானும். இவ்வாறே இவன் அனேக ஆண்டுகள் வாழ்ந்து வந்தனனும்.

இந்நரகாசுரன் துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் தேவர்களனைவரும் முறையிட்டதைக் கேட்ட திருமால், அவனைக்கிருஷ்ணவதாரத்தில் கொன்று விடுவதாக வாக்களித்திருந்தாராம். அதன் படியே, கிருஷ்ணன், ஒரு சமயத்தில் திருமாலின் அவதாரமென்று சொல்லப்படுகின்ற த[illegible] பூமிதேவி அவதாரமென்று சொல்லப்படுகின்ற சத்தியபாமையென்னும் தனதுமனைவியும் சேர்ந்து நரகாசுர பட்டினத்தை யடைந்தார்கள். கண்ணன் நரகாசுரனுடன் எதிர்த்துச் சண்டை செய்து கொன்றான். நரகாசுரன் இறக்கும்போது தான் இறந்த நாளை உலகத்தார் கொண்டாடும்படி செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டானும். அவன் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டு மென்று சத்தியபாமையும் விரும்பினளாம். அதற்கறிகுறியாகத்தான் தீபாவலிப் பண்டிகை ஏற்பட்டதாம். இது தான் பாகவதம் முதலிய புராணங்கள் வழங்கும் கதையாகும்.

இனி இக்கதை எவ்வளவு தூரம் உண்மையாக விருக்கவேண்டு மென்பதைச் சிறிது ஆராயலாம். பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலில் ஒளித்தான் என்னுங் கூற்று பொருந்துமா? பூமி உருண்டை வடிவமா? தட்டை வடிவமா? பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலில் ஒளிப்பது எப்படி? பூமியெங்கிருக்கின்றது. கடல் எதன் மீது இருக்கின்றது? என்ற கேள்விகளைக் கேட்போமாயின், திருமாலின் பன்றியவதாரத்திற்கே ஆபத்து வந்து விடுகின்றதன்றோ?

பிறகு பூமிதேவி பன்றியைக் கண்டு ஆசைப்பட்டாள் என்று கூறுவதனுல் பூமி என்பது ஒரு பெண்ணுருவமா? ஒரு பெண்ணின் மேலா நாம் இவ்வளவு காரியங்களையும் செய்து கொண்டிருக்கின்றோம்? என்ற கேள்விகளுக்கும் சரியான பதில் கிடைக்கவில்லை யன்றோ? ஒரு இயற்கைப் பொருளைப் பெண்ணாக ஆக்கி அப்பெண் ஒரு பன்றியோடு சேர்ந்து பெரும் புகழ் வாய்ந்த ஒரு பிள்ளையைப் பெற்றதாகக் கூறப்படும் கதையையும் உண்மையென்று நம்புவார் பகுத்தறிவுடையராகவிருக்க முடியுமா?

இனிக் கடைசியாக நரகாசுரனைக் கொன்றதாகக் கூறப்படும் கண்ணனைப்பற்றிச் சிறிது நினைத்துப் பார்ப்போம். திருமாலவதாரமென்று சொல்லப்படுகின்றகண்ணன் நரகாசுரனுக்குத் தந்தையாக வேண்டுமன்றோ? ஆகவேதகப்பன் மகனைக் கொலை புரிந்த கதைதான் தீபாவலி யென்று முடிக்கின்றதன்றோ? தகப்பன் தான் மட்டுஞ் சென்று மகனைக் கொல்லாமல் தாயாரையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு கொன்றானும். பூமிதேவியின் அவதாரமென்று சொல்லப்படுகின்ற சத்தியபாமை நரகாசுரனுக்கு தாயன்றோ! மகனைக் கொன்ற கண்ணன் பெருமையைத்தான் பெருமையாகப் பேசுகின்றோம்! அந்தோ இதைவிட குறைந்த அறிவுடைய செயல் வேறென்னவிருக்கின்றது!

மேற்கூறிய "உத்தமமான" புராணக்கதையினுல், நமது "பரிசுத்தமான" தீபாவலிப் பண்டிகையின் பெருமையை நீங்களே ஊகித்து உண்மையை உணரலாம்.

தீபாவலிப் பண்டிகைக்காக வழங்கி வரும் கதையே கட்டுக் கதையாக முடிகின்றபோது தீபாவலியை எப்படி நமக்குரிய பண்டிகையென்று கொள்ள முடியும்? இத்தகைய மூடக் கதையை—பொருந்தாத போலிக் கதையை—ஆதாரமாகக்கொண்ட தீபாவலியை வீண் செலவு செய்து ஏன் கொண்டாட வேண்டுமென்றுதான் கேட்கின்றோம்?

சிலர் "தீபாவலிப் பண்டிகைமழைக் காலத்தில் வருவதால், அன்று சுகாதார முறையைக் கைக்கொள்வதற்குப் பதிலாக இப்பண்டிகையின்மூலம் நம்மையும் நமது வீடுவாசல்களையும் சுத்தஞ் செய்கின்றோம்" என்கிறார்கள். எண்ணெய்தேய்த்து முழுகுவதும்,புதிய ஆடையைஉடுத்துக்கொள்வதும், சுகாதாரத்திற்கறிகுறியாம். வாணங்களை வாங்கிக் கொளுத்திக் கெட்ட காற்றை உட்கொள்வதும் சுகாதாரமாம். எண்ணெய்ப்பண்டங்களை உண்டு பிணியடைவதும் சுகாதாரமாம்! என்னே இவர்தம் அறியாமை?

நாம் தீபாவலியைப் பற்றிக் கூறுங்கால், "ஏராளமான பொருளை வீண் செலவு செய்யும், பொருளற்ற மத சம்பந்தமான சடங்குகளில் ஒன்றுதான் தீபாவலி" என்றுதான் கூறுவோம். தீபாவலி யன்று நமது இந்தியாவில் எவ்வளவு பொருள் வீணுகின்ற தென்பதைக் கணக்கிடுவோமாயின் கோடிக் கணக்கான பொருள் வீணுகின்றதென்பது விளங்கும், புதிய ஆடைகளுக்காக—ஆடம்பரமான உடைகளுக்காக-அந்நிய நாட்டினர்க்கு அளவு கடந்த பொருளை அள்ளிக் கொடுக்கின்றோம். ஒரு பயனுமற்ற வெடிகளுக்காக எத்தனை லட்சம் ரூபாய் அள்ளி இறைக்கின்றோம். "காசைக் கரியக்காதே வாணத்தை வாங்கிச் சுடு" என்ற பரிகாசப் பழமொழி நம்மை ஏளனஞ் செய்வதற்கு எழுந்த பழமொழியன்றோ; நமது இச் செய்கையைக் கண்ட அந்நியர் எவர்தான் நகைக்கமாட்டார்கள்? எவர்தான் நம்மை அறிவிலிகள் என்று கூறமாட்டார்கள்?

இம்மட்டோ! இன்னும் இவ்வெடிகளால் உண்டாகும ஆபத்துக்கள் எவ்வளவு? வெங்காயவெடி செய்வதனுல் கண்ணிழக்கின்றவர்கள் எத்தனை பேர்? கை யிழக்கின்றவர், காலிழக்கின்றவர் எத்தனை பேர்? உயிர் விடுவோர் எத்தனை பேர்? மற்றும் வெடிக்கும் வெடிகளால் காயமடைவோர்எத்தனை பேர்? இதற்கெல்லாம் காரணம், தீபாவலியென்னும் பாழும் கடன்கார மதச்சடங்கன்றோ? மதச் சடங் கென்பதைவிட மடச் சடங்கென்று கூறுவது பொருந்துமென்று நினைக்கின்றோம்.

# குறிப்பு.

வியாசம் அனுப்பும் அன்பர்களுக்கு,

தாங்கள் புக்போஸ்டில் அனுப்பும் வியாசங்களுக்கு இவ்விடத்திலும் கூட தபால் கட்டணம் ஒரு அணு கொடுக்கவேண்டி வருகிறது- காரணம் என்னவெனில் தாங்கள் அனுப்பும் வியாசத்துடன் கடிதமும் ஒன்று எழுதி வைத்து விடுகிறீர்கள்- சிலர் வியாசம் எழுதின கடிதத்திலேயே சமாச்சாரம் எழுதிவிடுகிறார்கள்- புக்போஸ்ட் ன்று அனுப்புவதில் வியாசமும் தங்கள் கையெழுத்தும் விலாசமும் மாத்திரம் தான் இருக்க வேண்டும்-

## நிருப நேயர்கள் கவனிக்க

இனிமேல் நீண்ட நிருபங்கள் கண்டிப்பாய் பிரசுரிக்கப்படமாட்டா

## எச்சரிக்கை.'

நமது பத்திரிகைக்கு ஆடர் சேர்க்க வரும் ஏஜண்டுகளிடம் முன் பணம் கொடுத்தால் அதற்கு நாம் பொருப்பாளி அல்ல.

மானேஜர்

## "நவசக்தி"


அடுத்த புதன்கிழமை வெளிவரும்.

"நவசக்தி" ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியாரின் தமையனரும், "நவசக்தி" காரியாலய மானேஜருமான ஸ்ரீமான் திரு வி. உலகநாத முதலியாரின் அருமைப் புதல்வன் ஸ்ரீ பாலசுப்பிரமணியன் இன்று காலை விண்ணுலகம் எய்தினமையால், இன்று (10—10—28) வெளிவரவேண்டிய 'நவசக்தி' இதழ் அடுத்த புதன் கிழமை [17—10—28-ல்] வெளியாகும்.

காரியஸ்தர், 'நவசக்தி'

இதுமட்டோ? மழை நாளில் எண்ணெய்ப் பண்டங்களை யுண்டு வயிற்று நோய் கொண்டோர் எத்தனை பேர்? விஷ பேதிக் குட்படுவோர் எத்தனை பேர்! சுரநோய் கொள்வோர் எத்தனை பேர்! இதற்கு வேறு உதாரணம் வேண்டாம், தீபாவலியன்று காலையில் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பார்வை யிடுவீர்களாயின் பலகாரப் பெருமையையும் தீபாவலியின் மாண்பையும் உணரலாம்.

ஆகவே, மதம் மதம் என்றுசொல்லிக் கொண்டிருப்பதனுல்—எவ்வளவு துன்பமுண்டாகின்றதென்பதை ஆராய்ந்து பாருங்கள்! இந்தத் தீபாவலிச் சடங்கினுல், நமது பொருளுக்கும், உடம்புக்கும், அறிவுக்கும், எவ்வளவு சேதமுண்டாகின்றதென்பதைச் சிறிது கூர்ந்து நோக்குவோமாயின் இதுபோன்ற சடங்குகளைக் கொண்டாட—மத சம்பந்தமான சடங்கென்று சொல்ல-முன்வருவோமா? தமிழ் மக்களுக்குப் பல வகையிலும் சேதம் விளைவிக்கின்ற இத் தீபாவலிப் பண்டிகையை—ஆரியப் புராணக்கதையில் ஏற்பட்ட இத் தீபாவலிப் பண்டிகையை—இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையிடும் இத் தீபாவலிப் பண்டிகையை ஒழிப்பதற்கு வழி தேடவேண்டும். இவ்வாறான மூடச் சடங்குகளையும், பண்டிகைகளையும், வழக்கங்களையும், ஒளிப்பதில்தான் நமது விடுதலை அடங்கிக் கிடக்கின்றது.



ஆனந்தரூபீர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஹு புரட்டாசி மீ 29-உ

# சர்வகக்ஷி மகாநாட்டின் வண்டவாளம்.

I.

சர்வகக்ஷி மகாநாடு எனப் பெயர் வைத்துக்கொண்டு சிலர் கூடி செய்து வரும் ஜெகஜாலப்புரட்டுகளையும் சூழ்ச்சிகளையும் மக்கள் ஏமாறத்தக்கவண்ணம் வேண்டுமென்றே நம் நாட்டில் சில தேசியப் பத்திரிகைகள் என்னும் வயிற்றுப்பிழைப்புப் பத்திரிகைகள் செய்துவந்த புரட்டுகளெல்லாம் இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டதை யாவரும் அறிந்திருக்கலாம். இதன் காரணம் அப்பத்திரிகைகள் தங்களுக்கென யாதொரு வித கொள்கையும் இல்லாமல், சற்றும் விவகார ஞானமும் இல்லாமல், சமயத்திற்குத் தகுந்தபடியும் காசுகொடுப்பவர்கள் சொல்லுகின்றபடியும் நடக்கவேண்டியிருப்பதால், சற்றும் மானம் ஈனம் வெட்கமின்றி தினத்திற்கு ஒரு குட்டிக்கரணம் வீதம் போட்டு மாறிமாறி எழுதவேண்டியவைகளாகவே இருக்கின்றன.

உதாரணமாக, சர்வகக்ஷி மகாநாட்டைப் பற்றியும் அதன் தீர்மானங்களைப்பற்றியும் இக்கூலிப் பத்திரிகைகள் ஒரே அடியாக வானமளாவப் புகழ்ந்ததும், அதை உலகமே ஒப்புக்கொண்டாய் விட்டது என்றதும், இனி தேசத்திற்கு விடுதலை ஒரு விரக்கடைதூரம் தான் இருக்கின்றது என்றதும், அதில் கலந்து வேலை செய்தவர்களையெல்லாம் பாராட்டி எழுதி வந்ததும்போய் இப்போது அதில் உள்ளவர்களையும் அதன் முக்கியஸ்தர்களையும வைவதைப் பார்த்தால் ஒருவரிடம் கூலி வாங்கிக்கொண்டு மற்றவர்களை வைவதாகவோ அல்லது கூலி கொடுக்காததற்காக வைவதாகவோ நன்றாய் விளங்கும். நிற்க,

முதலில் சர்வகக்ஷி மகாநாட்டுத் தீர்மானங்கள் என்பது மக்கள் எல்லோருக்கும் பொதுவான உரிமையும் நலமும் அளிக்கக்கூடியதா என்பதை கவனிப்போம். ஏனெனில், எந்த சீர்திருத்தமோ சுயராஜ்யமோ விடுதலையோ பூரணவிடுதலையோ என்பவைகள் ஒரு நாட்டுக்குக்கிடைப்பதானால் அது அந்நாட்டு மக்கள் எல்லோரும் சம உரிமை அனுபவிக்கக்கூடிய யோக்கியதையில் இருக்கின்றதா என்பதைத்தான் பார்க்கவேண்டும். இந்த முறையில் நமது நாட்டை எடுத்துக்கொள்ளுவோம். எந்தக்காரணத்தை முன்னிட்டானாலும் சரி, எந்தக்காலம் முதற்கொண்டானாலும் சரி, நமதுநாடு அதாவது நாம் சுயராஜ்யமோ விடுதலையோ கோரும் நாடாகிய இந்திய நாடானது பல்வேறு மதம் ஜாதி வகுப்புகளாக பிரிக்கப்பட்டது என்பதும், அதனாலேயே மக்கள் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு பாராட்டுகின்றார்கள் என்பதும், ஒருவருக்கொருவர் நடை உடை பழக்கவழக்கம் வாழ்க்கை முதலியவைகளில், ஜாதியின் பேரால், மதத்தின் பேரால், மோக்ஷத்தின் பேரால், கடவுளின் பேரால் மாறுதல் அடைந்திருக்கின்றார்கள் என்பதும், இந்தக்காரணங்களால் ஒருவரிடம் ஒருவர் ஒற்றுமையில்லாமல் நம்பிக்கை கெட்டு வெறுப்புக்கொண்டு துவேஷத்திற்கும் பழிவாங்கும் தன்மைக்கும் ஆளாகியிருக்கின்றார்கள் என்பதும் இதற்கு அரசாக்ஷியும் சட்டமும் கடவுளும் மதமும் வேத சாஸ்திரங்களும் ஆதரவு கொடுத்து வருகின்றன என்பதும் யாராலும் மறுக்கக்கூடிய காரியம் அல்ல.

இந்த நிலையிலுள்ள மக்களைக்கொண்ட நாட்டிற்கு ஏதாவது ஒரு கடுகளவு முன்னேற்றத்திற்கோ விடுதலைக்கோ முயற்சி செய்வதானால் முதலில் மேல்கண்ட கெடுதிகளை ஒழிக்கும்வழி இருக்கும்படியான ஏற்பாட்டுடன் முயற்சிக்கவேண்டியது நியாயமும் யோக்கியமும் நாணயமும் ஆகும். அதை வேண்டுமென்றே மூடிவைத்துக்கொண்டோ அல்லது அதைப்பற்றிக் கவலை இல்லாமலோ இருந்துகொண்டு வேறு வழியில் பிரவேசிப்பதென்பது ஒருசிறிதும் பயனளிக்காத காரியம் என்பதல்லாமல், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரிதும் கேட்டை விளைவிப்பதாகும் என்றே சொல்லுவோம். ஏனெனில் இந்த முக்கியமான குற்றங்கள் நமது நாட்டில் இருப்பதினாலேயே நமதுநாடு வெகுகாலமாகவே அடிமைவாழ்க்கையிலும் அந்நிய ஆதிக்கத்திலும் இருக்கவேண்டி இருக்கின்றது- எனவே இவைகளை ஒழிக்கத்தக்க கொள்கைகளோ முறைகளோ ஏதாவது ஒருசிறிது மேல்கண்ட சர்வகக்ஷி மகாநாட்டில் இருக்கின்றதா என்று பார்த்தால் அடியோடு இல்லாததோடு ஏற்கனவே உள்ள ஒருசிறிதும் பிடுங்கப்பட்டிருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும்.

அதாவது, இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள், ஐரோப்பியர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் ஆகிய பிரிவினர்களுக்கு தனித்தனி தேர்தல் தொகுதியும், இந்துக்களில் தென்னாட்டில் உள்ள பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரிவுகளுக்கு தேர்தல் மூலம் ஒதுக்கிவைக்கும் முறையும், தீண்டாதவர்கள் என்னும் தாழ்த்தப்பட்டவகுப்புகளுக்கு சர்க்கார் மூலம் நியமனம் செய்வதற்கு ஒதுக்கிவைத்துக்கொண்டு வருவதும் ஆகிய முறைகள் கொஞ்சகாலமாக இருந்து வந்தது. இந்த முறைகள் 20 வருஷத்திற்கு முன்னும் 10 வருஷத்திற்கு முன்னும் இந்துமுஸ்லீம் மகாநாடு என்னும் பேராலும் சீர்திருத்தம் என்னும் பேராலும் காங்கரஸ் என்னும் பேராலும் சர்வகக்ஷி மகாநாடு என்னும் பேராலும் கூட்டங்கள் கூட்டி இந்தியப் பொதுமக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம் என்கின்ற முறையில் சர்க்காருக்கு அறிக்கை செய்து அதன் மூலமாக அடைந்த சாதனங்களாகும். அன்றியும் இந்த சாதனங்களின் பலனாக சமூக வாழ்க்கையில் தாழ்த்தப்பட்டவர்களும் கல்வியில் பிற்பட்ட வகுப்பார் என்பவர்களும் ஒரு விதத்தில் தங்கள் நிலைமையையும் யோக்கியதையையும் உணரவும் ஒரு சிறிதாவது மனிதத்தன்மை அடையவேண்டும்என்கின்ற ஆசை பிறக்கவும் மார்க்கம் ஏற்பட்டது. இதற்கு நாம் உதாரணங்கள் எடுத்துக்காட்டவேண்டியதில்லை என்றே நினைக்கின்றோம்.

இப்படி இருக்க, இப்போது சர்வகக்ஷி மகாநாட்டின் பேரால் ஏற்படுத்தப்பட்ட சுயராஜ்ய திட்டத்தில் வேண்டுமென்றே இந்த சாதனங்கள் அழிக்கப் பட்டிருக்கின்றன. அதாவது முகமதியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் இல்லை.

பிற்பட்ட வகுப்பாருக்கு என்று ஒதுக்கி வைக்கும் முறையும் இல்லை.

தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு என்று சர்க்கார் நியமனமும் இல்லை.

இவ்வளவும் இல்லாததோடு இவர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு வேறு எந்த விதமான மார்க்கமும் செய்யவும் இல்லை.

வங்காளம், பஞ்சாப்பு ஆகிய மாகாணங்களுக்கு மாத்திரம் இந்து முஸ்லீம்களைப் பொருத்தவரை சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்துக்கொள்ள சம்மதித்திருப்பதாக மாத்திரம் காணப்படுகின்றது.

தென்னாட்டில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரிவினையும், தீண்டக்கூடாதார், கண்ணில் பார்க்கக்கூடாதார், தெருவில் நடக்கக்கூடாதார் என்கின்ற பிரிவினையும், இந்த வகுப்புகள் ஒன்றுக்கொன்று நம்பிக்கை இன்மையும் ஒற்றுமை இன்மையும் துவேஷமும் கொண்டு ஒன்றுக்கொன்று சம உரிமை அற்று கொடுமையாய் நடந்து வருவதும் மறுக்கக்கூடாத விஷயமாகும். இதற்கு மேல்கண்ட சர்வகக்ஷி மகாநாட்டில் எவ்வித விமோசனமும் இல்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு தனித்தேர்தல் தொகுதியோ ஒதுக்கிவைத்தலோ சர்க்கார் நியமனமோ ஆகிய ஒன்றுமே இல்லாவிட்டால் அவர்கள் மற்றபடி வேறு எந்த வழியில் பிரதிநிதித்துவத்தை அடையமுடியும்?

அதுபோலவே முஸ்லீம்களுக்கும் தனித்தேர்தலோ, ஒதுக்கிவைத்தலோ, நியமனமோ இல்லாதவரை அவர்கள் எந்த விதத்தில் பிரதிநிதித்துவம் பெற முடியும்? அதுபோலவே பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார்களும்–பொதுத்தேர்தலாலேயே ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதமும் கட்சியும் துவேஷமும் ஏற்பட்டிருப்பதற்கு-தனித்தேர்தல் ஏற்படுத்தாத பக்ஷம் வேறு எந்த மார்

க்கத்தில் இவர்கள் ஒற்றுமைப்பட முடியும்?

ஒரு நாட்டில் 5ல் ஒரு பங்காகிய 6-கோடி மக்கள் தீண்டாதாராக பாவிக்கப்பட்டு, கல்வி, அறிவு, மனிதத்தன்மை, சுயமரியாதை முதலியவைகள் அடைவதற்கு மார்க்கமில்லாமல் அநேக காலமாக அமுக்கி வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு எவ்வித விமோசனமும் செய்யப்படாமல் ஒரு திட்டம் தயாரித்திருப்பதாகச் சொன்னால் அந்தத் திட்டம் யோக்கியமான திட்டமாகுமா? அந்த சமுகத்தார் அத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள சம்மதிப்பார்களா? அன்றியும் பொதுத் தேர்தலில் இவர்களுக்கு ஒரு ஸ்தானமாவது கிடைக்குமா? எனவே எல்லோருக்கும் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கும்படியான முறை அதில் இல்லை என்றே சொல்லுவோம்.

தவிர, எல்லோருக்கும் ஓட்டுரிமை அதாவது 20 வருஷத்திற்கு மேற்பட்ட ஆண் பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்படவேண்டுமென்று சர்வகட்சி மகாநாடு திட்டத்தில் கேட்கப்பட்டிருக்கின்றது.

எல்லா மக்களும் தங்களது ஓட்டுரிமையை சரியானபடி உபயோகிக்க கற்பிக்கப்பட்டிருக்கின்றார்களா? என்பது நமது முதல் கேள்வி. ஓட்டுரிமை இன்னதென்றும் அதை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்பதைப்பற்றியும் பாமர மக்களுக்கு ஒரு சிறிதும் கற்பிக்காமலும் கற்பிக்க கவலை கொள்ளாமலும் இருந்துகொண்டு அவர்களுக்கு ஓட்டுரிமை வாங்கிக் கொடுப்பதால் அந்த நாட்டுக்கு என்ன பலன் கிடைக்கக்கூடும்? பாமர மக்களை ஏய்க்கவும் அவர்கள் கையைக்கொண்டே அவர்கள் கண்ணை குத்திக்கொள்வதற்குமே உதவுமேயல்லாமல் வேறு என்ன பலன் ஏற்படும்?

இப்பொழுது நமது நாட்டின் தேர்தல்களின் யோக்கியதைகளைப்பற்றி யோசிப்போமேயானால் அதன் தன்மையை வெளியிட முடியாத நிலைமையில் இருக்கின்றோம். வெளியிடுவதானாலும் இதில் இடம் போதாது. எவ்வளவு ஒழுக்க ஈனங்களும், புரட்டுகளும் பித்தலாட்டங்களும், ஏமாற்றல்களும், நாணயக்குறைவான காரியங்களும் நடைபெறுகின்றன! என்பதை நாம் எடுத்துக்காட்டவேண்டுமா?

இந்த நிலையில் இவைகள் திருத்தப்பட எவ்வித முயற்சியும் செய்யாமல் மேலும் மேலும் இம்மாதிரியான காரியங்கள் அதிகமாவதற்கு ஏக்கமாதிரியாகவே ஓட்டர் தொகுதிகளை ஏற்படுத்தினால், அதனால் நாட்டிற்கோ மக்களுக்கோ என்ன நன்மைகள் கிடைக்கக்கூடும்? மிராசுதாரன், முதலாளி, பணக்காரன், படித்த பித்தலாட்டக்காரன், கையில் வலுத்தவன் முதலியவர்கள் போன்ற சுயநலக் கூட்டத்தாருக்கு இம்முறைகள் பயன்படுமே ஒழிய பாமரமக்களுக்கோ தொழிலாளிக்கோ விவசாயிக்கோ ஏதாவது ஒரு சிறிது அனுகூலமாவது ஏற்பட வழியுண்டா என்று யோசித்துப் பார்க்க விரும்புகிறோம்.

தவிர, எல்லா மக்களுக்கும் பொது உடைமையில் சம உரிமை அளிக்கப்படும் என்பதாக ஒரு வாசகம் அத்திட்டத்தில் காணப்படுகின்றது.

இது பொது ஜனங்கள் கண்களில் மிளகாய்ப் பொடியை அள்ளிப் போடுவதற்காகவே கண்டுபிடித்து எழுதப்பட்டதாகும். ஏனெனில் மத சம்பந்தமான காரியங்களிலும் பழமையான பழக்க வழக்க அனுபோகங்களிலும் சர்க்கார் பிரவேசிக்கக்கூடாது என்பதாக ஒரு நிபந்தனை ஏற்கனவே இருப்பதாகவும் அது மகாராணியால் ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் உறுதிப்படுத்தப் பட்டாய்விட்டது.

அந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டே எந்தவிதமான உரிமைகளோ சீர்திருத்தங்களோ தலைகாட்டினாலும் ஒரே அடியாய் மண்டையில் அடித்து கொன்றுவிடுவதாயிருக்கின்றது.

அந்த நிபந்தனைகள் இருக்கும்போது மக்களுக்கு புதிதாக வேறு எந்தவழியில் சம உரிமை கொடுக்கமுடியும்?

சமீபத்தில் சட்டசபை முதலியவைகளில் சீர்திருத்த சம்பந்தமாய் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களும் மசோதாக்களும் மத ஆச்சாரிகளாலும் உயர்ந்த ஜாதிக்காரர்களாலும் பட்டபாட்டிலிருந்தும் அவைகளுக்கு ஏற்பட்ட எதிர்ப்பிலிருந்தும் அவ்வுரிமையின் பயன் நன்றாய் விளங்கும். ஆதலால் அந்த வாசகம் மக்களை ஏய்ப்பதற்கு கண்டுபிடிக்கப்பட்டதே தவிர வேறில்லை.

எனவே சர்வகட்சி மகாநாடு என்பது ஒரு ஏமாற்றும் மகாநாடே ஒழிய வேறில்லை. அதில் கலந்திருப்பவர்களிலும் அதை ஆதரிப்பவர்களிலும் பெரும்பான்மையோர் கடைந்தெடுத்த மோசக்காரர்களும், சுயநலக்காரர்களும் தங்களது சமூகத்தையும், தேசத்தையும் விற்று வாழ்க்கை நடத்தும் இழிகுணம் படைத்தவர்களுமானவர்களே ஒழிய வேறில்லை என்றே சொல்லவேண்டியிருப்பதற்கு வருந்துகிறோம்.

எனவே அத்திட்டத்தை பொதுமக்களும் சிறப்பாக பிற்பட்டவர்களும் ஒப்புக்கொள்வது என்பது தற்கொலை என்றே சொல்லுவோம்,

மற்றபடி அதன் சூழ்ச்சிகளைப்பற்றியும் இந்தசமயத்தில அது எதற்காக செய்யப்பட்டது என்பதைப்பற்றியும் சென்னையில் கூட்டிய சர்வகட்சி மகாநாடுஎன்பதின் புரட்டைப்பற்றியும் அதில் கூடியுள்ளவர்களின் தனித்தனியோக்கியதைகளைப் பற்றியும் பின்னால் எழுதுவோம்.

---

## அந்தோ!

'நவசக்தி' ஆசிரியர் திருவாளர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்களின் தமையனாரும், 'நவசக்தி' காரியாலய மானேஜருமான திருவாளர் உலகநாத முதலியாரின் அருமைப் புதல்வன் ஸ்ரீ பாலசுப்பிரமணியன் நிகழும் அக்டோபர் மாதம் 10-ம் வயன்று காலை திடீரென்று மண்ணுலகத்தை நீத்ததை யறிந்து சொல்லொணாத் துயரடைகின்றோம். ஆருயிர்ப் புதல்வனை யிழந்த திருவாளர் முதலியார் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## விஸ்வகர்ம சங்கம் சிலாங்கூர்

நாளது 1928ம் வருஷம் செப்டம்பர் மாதம் 23ம் தேதி ஞாயிற்றுக்கிழமையிற் பகல் நாலுமணிக்கு கோலாலம்பூர் அம்பாங் தெரு 54ம் [illegible] மேல்மாடியில் திருநா வைத்திலிங்கப் பத்தர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் விஸ்வகர்ம சங்க ஸ்தாபனத்தை முன்னிட்டு ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பெற்றது. சுமார் நூறு விஸ்வகர்ம பிரமுகர்கள் விஜயஞ் செய்திருந்தனர். தலைவர் "விஸ்வகர்ம மக்கள் முன்னேற்றம்" என்னும் விஷயத்தைப் பற்றி இரண்டரை மணிநேரம் சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்னர் சங்கத்தின் நோக்கங்களும் பிரமாணங்களும் வாசிக்கப் பெற்று சபையோர்களால அங்கீகரிக்கப் பெற்றன.

அக்கிராசனரின் முடிவுரைக்குப் பின் சென்னை வாசியாகிய ஸ்ரீமான் தி. ஐ. சாமிநாத ஆச்சாரியார் அவர்களால் சங்கத்தின் உத்தாரணத்தை விரும்பி யெழுதப்பட்ட உபசாரப்பத்திரம் வாசிக்கப் பெற்றுக் கூட்டம் இனிது கலைந்தது.

கே. வி. விஸ்வலிங்க ஆச்சாரியார்

## கூத்தூர் வைக்கம் வீரர் வாசகசாலை.

இவ்வாசகசாலை நாகூர் திருவாளர் சி. முத்துகிருஷ்ண பிள்ளையவர்களால் 18-11-28ல் திறக்கப்படும் என்பது நேயர்களறிந்ததே. திரு பிள்ளையவர்களின் போதனையால் சுயமரியாதை உணர்ச்சி பெற்ற திருவாளர்களான அப்பா பிள்ளை சாமிநாத பிள்ளை இவர்கள் முறையே மனைவி, பிதா திதிகளை எவ்வித புரோகிதமுமின்றி சுயமரியாதைக்கொள்கைப்படி சில ஏழைகளுக்கு அன்னமிட்டு இனிது முடித்தனர். இவ்வாசகசாலை ஸ்தாபிக்கப்பட்டால் பாழும் பார்ப்பனீயமும், பழைய மூடப்பழக்க வழக்கங்களும் இவ்வூரில் தலைகாட்டாது அழிந்து போய்விடும் என்பது திண்ணம்.

அ. ரா. ரத்தினசாமி பிள்ளை.

## மகாநாட்டின் தீர்மானங்களும் மருத்துவர்களும்

மதுரை இராமநாதபுரம் ஜில்லா பார்ப்பனரல்லாத இளைஞர் முதல மகாநாட்டில் நிறைவேற்றிய-மருத்துவகுலத்தவர்களை யொட்டியசில சீர்திருத்தத் தீர்மானங்களை அம்மகாநாட்டின் முக்கியஸ்தர்களும் சட்டசபை அங்கத்தினர்களும் காருண்ய கவர்ன்மெண்டாரவர்களும் கவனியாதிருப்பதும் இவ்வகுப்பார் முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பதும் வருந்தத்தக்கதாகும். என்று "ஓர் மருத்துவகுலத் தொண்டர்" எழுதுகிறார்.

## மதுரை முனிசிபல் கவுன்சில் நியமனம்.

மதுரை புத்தகசாலை திருவாளர் S கூடலிங்கம் பிள்ளையவர்கள் மதுரை நகரபரிபாலன சபைக்கு ஓர் அங்கத்தினர் (கௌன்சிலர்)ராக சென்ற வாரம் முதற்கொண்டு நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என ஒரு நிருபர் எழுதுகிறார்-

## மக்களும் சமயமும்.

(திருச்சி திரு- சா குருசாமி எழுதுவது)

I

சமயம் அல்லது மதம் என்பது மக்களுக்காக ஏற்பட்டதா அல்லது, மக்கள் சமயத்திற்குக் கட்டுப்பட்டவர்களா? என்னும் இச்சிறிய வினாவொன்றே இக்கட்டுரையின் கருத்தாகும்.

உலகம் தோன்றிய காலத்திலிருந்து பலசமயங்கள் தோன்றி, பல அழிந்து, பல அழியும் தருவாயிலும் இருப்பதை யாரும் மறுக்கமுடியாதென நம்புகிறோம். முதலாவதாக மதம் மனிதனுக்கு இன்றியமையாததா? மனித அறிவு வளரவளர சிலமதங்களிலுள்ள அதிகமான ஊழல்களும் முன்பாடான கொள்கைகளும் விளக்கமாய்த் தோன்றுகின்றன- பாவம், புண்ணியம், என்னும் இரண்டு வார்த்தைகளில் அடங்கிவிடக்கூடிய பலவிஷயங்கள் அறிவு முதிர்ச்சிகாரணமாய்ப் பலஐயப்பாடுகளை உண்டாக்கிவிடுகின்றன. உதாரணமாக, புலாலுண்ணல் பஞ்சமாபாதகங்களில் ஒன்று எனக் கூறிய சமயங்கள், கிரீன்லண்டிலுள்ள எஸ்கிமோ கூட்டத்தார், (அங்கு தாவரவர்க்கங்கள் வளருவதின்மையால்) தங்கள் உயிர் வாழ்வின் பொருட்டு பச்சை மாமிசங்களையே உண்டு வாழவேண்டியிருக்கிறதே என்ற வினா எழுங்காலத்து, பதில் கூறமுடியாது திகைக்கின்றன. அன்பின் சொரூபமாகிய தனிப்பெருங் கருணைவள்ளல் எஸ்கிமோ சாதியாரை எந்தப்பிறவியில் மேம்படுத்த முடியும்? அவர்களோ பஞ்சமா பாதகத்தில் ஒன்றைச்செய்தே உயிர்வாழவேண்டிய நிலையிலிருக்கிறார்கள். இன்னும், சமீப காலத்துத் தாவர நூல் ஆராய்ச்சி வல்லுனர், தாவரத்திற்கும் உயிர் உள்ளதெனக் கூறுகின்ற முகத்தான், அதனையழித்தலும் பாவமெனக் கொள்ளல் வேண்டுமன்றோ? ஆகவே, உடற்கூற்று நூற்புலவர், மனித அமைப்பிற்குப் புலாலுணவு ஏற்றவையன்று எனக்கூறுவதால், அதுபொருத்தமுடைத்தென்று கொள்ளக்கிடக்கும்- இவ்வுண்மையை உற்று நோக்குங்கால் இது "பகுத்தறிவுகாலம்" என்பது வெள்ளிடை மலை- மனிதனின் தூயவாழ்விற்கும், மனச்சமாதானத்திற்கும் பற்றுக்கோடாகிய ஒரு மதம் வேண்டுவது அவசியமா? நம்முன்னோர், அவர் காலத்துக்கேற்றவாறான கொள்கைகளைக் கொண்ட சமயங்களை நிலவச்செய்து போந்தனர்- நம்முன்னோர் வாழ்ந்த நிலையில் நாம் வாழவில்லை. வாழவிரும்புவதுமில்லை, சக்கிமுக்கிக் கல் உதவியால் தீயுண்டாக்கிய முன்னோரைப் பின்பற்றி வாழ இச்சையுள்ளவர் உளரோ? தீக்குச்சி உதவி இன்றியமையாததாய் இருக்கிறது. அவ்விதமே நம் ஆன்றோரின் சமூகவாழ்விற்குச் சாதகமாயிருந்தன- அவர்களால் ஏற்படுத்தப்பட்ட சமயங்கள். அவை இக்காலத்திற்கும் ஏற்றவைகளாய் எவ்விதமிருக்கமுடியும்? அவரவர்களுடைய சமய வளர்ச்சிக்குத் தக்க குறிகளையும் தெய்வங்களையும் அவர்கள் போற்றிவந்தனர். அவைகளால் அக்காலத்து சமூகத்திற்கு இன்னல்கள் இல்லாமலும் வாழ்க்கைக்குப் பொருத்தியதாயும் இருந்திருக்கலாம். ஆனால் இக்காலத்தில் முற்றும் மாறுபாடயிருக்கின்றன என்பது தெளிவு. இக்காலத்து சமயங்களில் பலமனிதவாழ்விற்கே பெரும்இடையூறாகவும் சமூகவளர்ச்சிக்குத் தடையாகவும் இருக்கின்றன- அதனாலன்றோ பல அறிஞர்களும், ஆராய்ச்சிக்காரர்களும், புதிய மதங்கள் பல தோற்றுவிக்கின்றனர்- ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், பிரம்மஞானம் முதலிய கிளைச்சமயங்கள் தோன்றக் காரணமாயுள்ளது எது? நம் இந்து சமயத்தில் உள்ள ஊழல்கள் அல்லவா? இதுநிற்க.

மேனாடுகளிலும் துருக்கி, ஆப்கானிஸ்தானம்போன்ற தேசங்களிலும் கடவுளின் பேராலும் சமயத்தின் பேராலும் எவை எவை சமூக வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளனவோ அவைகளையெல்லாம் சமயத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் விலக்கிவிட்டார்கள். தங்கள் மதநூல்களிலுள்ள குற்றங்களைக் கண்டிக்கிறார்கள். பிறதேசங்களைப்போல் தாமும் முன்னேற வேண்டுமென்ற ஆவலினால் தாம் கொண்டிருந்த மூடப்பழக்கவழக்கங்களை உதறிவிட்டு சமூகவளர்ச்சிக்கும் அறிவுவளர்ச்சிக்கும் சாதகமானவைகளை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அவரவர்கள் மதப்புத்தகங்களிலுள்ள குற்றங்களைக் கண்டிக்கிறார்கள், சமூகச்சீர்திருத்தத்தில் ஒருவருக்கொருவரும் போட்டி போட்டுக்கொண்டு சகலருக்கும் நன்மைபயக்கத்தக்க மாறுதல்களைச் செய்கின்றார்கள். துருக்கியிலும் ஆப்கானிஸ்தானத்திலும் இளம்பெண்கள் தங்கள் முகமூடியைக் களைந்துவிட்டு சூரிய வெளிச்சமாகிய அறிவுச்சுடரை பிறமனிதர்கள்போல் அநுபவிக்கிறார்கள்- மேனாடுகளுக்குச் சென்று கல்விபயில ஆரம்பித்து விட்டார்கள். முகம்மதிய மதத்தினைப்போன்ற வீரமான கொள்கையுடையதும் மதப்பற்றுடையதுமான சமூகம் உலகில் இல்லையெனச் சொல்லலாம். இத்தகையமதம் இன்று துருக்கியில் எவ்வாறிருக்கிறது? அங்கெல்லாம் மூடக்கொள்கைகள் பறந்து ஓடுகின்றனவே! இதைப்பார்த்தாவது நம் இந்தியர்களுக்கு அறிவு வரும் காலை வரவில்லையே! மேனாடுகளில் சமூகச்சீர்திருத்தமும் சமயச் சீர்திருத்தமும் இவ்வாறு வளர்ந்துகொண்டிருக்க நாம் பெருமை படித்திக்கொள்ளுகின்ற இந்துமதத்தின் நிலையைக் கவனிப்போம்.

(தொடரும்) "திராவிடன்"

---

### சோழவந்தான் தேசீய தர்மபாளியின் நான்காம் ஆண்டு.

நிகழும் விபவ-ஞு புரட்டாசி-மீ 29-உ (14—10—28) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இப் பள்ளியின் நான்காவது நிறைவு விழா திருவாளர் எஸ். ராமநாதன் எம். எ, பி. எல். அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறும்.

அவ்வமயம் 'குடி அரசு' பத்திராதிபர் ஈரோடு திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களும் விஜயம் செய்வார்கள். தாங்களும் தவறாது விஜயம் செய்து ஷை விழாவைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். காரியதரிசிகள்.

மு. சுப்பிரமணிய முதலியார்
தி. வெங்கிடசாமி அய்யா

---

### பெ. புதுப்பட்டியில் வைக்கம் வீரர் உருவப்படத் திறப்புவிழா.

சுயமரியாதைச் சூரியர் உயர் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களுடைய திருவுருவப்படத் திறப்புவிழா சுயமரியாதைச்சங்கத்தில் 1-10-28-ல் நடைபெற்றது. அதுசமயம் ஜே. திருக்குமரிபுரம் சுயமரியாதைச் சங்கத்ினரும் திருவாளர்கள் அருப்புக்கோட்டை டாக்டர் கே. பாண்டியன், எஸ். கே. குருசாமி நாயுடு, வா. து வாழவந்தான் அ. கா. சொ. பாலச்சந்திரன், ஜே திருக்குமரிபுரம் சு. கந்தசாமித்தேவர், சி. கு. ராமசாமி ரெட்டியார், அ திருவேங்கட ரெட்டியார் பா. ரெ ராமசாமி ரெட்டியார், கஸ்தூரிச்சுப்பா நாயக்கர், அழகிய நல்லூர் ம சொ திருவேங்கடராமானுஜம், இந்நகர் சங்கத்தின் காரியதரிசி தி. திம்மா ரெட்டியார், பிரசிடெண்ட் சு-ந போடி, பு ரெ அ ராமசாமி, கா சு நா நா ராமசாமி ரெட்டியார், கா சு நா ரா நாராயண ரெட்டியார், கா சு நா நா ராமலிங்க ரெட்டியார், சு வெங்கடசாமி நாயுடு, சி. பா. ரெங்கப்ப ரெட்டியார், பலசரக்கு மளிகை நா தி ரெங்கப்ப ரெட்டியார், நா கு நாகு ரெட்டியார், வா. ராமசாமி ரெட்டியார் முதலியவர்களும் பல முக்கியஸ்தர்களும் ஏராளமான பெண்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

ஆரம்பத்தில் திருவாளர் தி கருப்பையா பிள்ளையவர்கள் வைக்கம் வீரமூர்த்தியின் திரு உருவப்படத்தைத் திறந்து வைக்கும் பாக்கியம் தமக்குக் கிடைத்ததைப்பற்றி சந்தோஷப்படுவதாககூறிவிட்டு திருநாயக்கர் பெருமானின் தியாகத்தை எடுத்துச் சொல்லி அவர் இயக்கப் பத்திரிகைகளாகிய "குடி அரசு" "ரிவோல்ட்" 'திராவிடன்' 'ஜஸ்டிஸ்' பத்திரிகைகளை ஆதரிப்பது அவருக்குச் செய்யும் சிறந்த கைமாறு ஆகுமென்று கூறி வைக்கம் வீரமூர்த்தி நீடூழி வாழ்க வாழ்கவென்று கூறி அவரது திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார். பின்னர், சந்தனம் தாம்பூலம் வழங்கப் பெற்று மேளவாத்தியங்களுடன் சுயமரியாதைக் கீதத்தோடு திரளான ஜனங்கள் நாயக்கர் திருவுருவப்படத்துடன் நகர்வலமாக நகர மத்தியிலுள்ள கொத்தாள மேடைக்கு வந்து உயர் திரு நாயக்கர் படத்தை புஷ்பமாலைகளால் அலங்காரம் செய்துவைத்து டாக்டர் கே. பாண்டியனவர்கள் தலைமையில் ஒரு பெருங்கூட்டம் கூடியது. திருவாளர் எஸ். கே குருசாமி நாயுடு அவர்கள் தேச முன்னேற்றம்" என்பது பற்றியும் திரு ச கந்தசாமித் தேவரவர்கள் "சுயமரியாதையே சுயராஜ்யம்" என்னும் பொருள் பற்றியும் திரு தி கருப்பையா பிள்ளையவர்கள் 'பெண்மக்களும் சுயமரியாதையும்' என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

பிறகு, வந்தனோபசாரத்துடன் இரவு 11—30 மணிக்கு ஜெ கோஷத்துடன் நாயக்கர் திருவுருவப்படம் ஊர்வலமாக சங்கக்கட்டிடத்திற்கு கொண்டுவரப்பட்டபின் கூட்டம் இனிது கலைந்தது. ஒரு நிருபர்-

உதயேந்திரம்

## கிராமச்சாவடி கேஸ்.

### கர்ணம் ஐயங்கார்
### 50-ரூபாய் அபராதம் விதிக்கப்பெற்ருர்

வடஆற்காடு ஜில்லா வாணியம்பாடி பாலாற்றங்கரையின் வடமேற்காயுள்ள சரித்திரப்பெருமை வாய்ந்த உதயேந்திரம் கிராமச்சாவடியில், கடந்த 1927-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 11-ம் தேதி வியாழக்கிழமைகாலை சுமார் 11-மணிக்கு,உலர்ந்துபோன மரங்களை ரெவினியூ இன்ஸ்பெக்டராதீனத்தில் ஏலம் போடப்போவதாயறிந்து ஜனங்கள் ஷை சாவடியில்கூடியிருந்தார்கள். அவூர்க்கத்தோலிக்ககிறிஸ்தவ அன்பர்கள் சிலருமஷை கிராமபஞ்சாயத்துக்கோர்ட்டுமெம்பர்களான கனம் சி.எஸ். சவரியப்பனவர்களும்மற்றவர்களைப்போலவே அச்சாவடியினுள்போடப்பட்டிருந்த பெஞ்சியின்மேலுட்கார்ந்தார்கள். உடனே அங்கிருந்த தலையாரிகளை மேற்படி கர்ணம் அய்யங்கார் விளித்து "பறையர்களெல்லாம் பெஞ்சுகளில் உட்காருகிறுர்கள் பெஞ்சுகளை வெளியேயெடுத்துப்போடுங்கள்" என்றுர்- அதன்படியேஅவர்கள் பெஞ்சிகளை வெளியேயெடுத்துப்போட்டு விட்டதால் ஷை மெம்பர்கள் அவமானப்படுத்தப்பட்டு ஷை மெம்பர்களிலொருவர் சி. எஸ் சவரியப்பனவர்கள் இது விஷயமாய் பஞ்சாயத்துகோர்ட்டில் பிரியாதுசெய்தார்.

வாதிக்குப்பலவகையிலும் கஷ்டமும் நஷ்டமும் உண்டாக்கக்கருதி எதிரி செய்த சிற்சில சூழ்ச்சிகளால் பல வாய்தாக்கள் போடப்பட்டு கடைசியாக 25—9—28-ல் மகா-ா-ா-ஸ்ரீ குடியாத்தம் சப் மாஜிஸ்டிரேட் கே. கோவிந்த செட்டியார் அவர்கள் இ- பி- கோ. 504-வது செக்ஷன்படி எதிரியானவர் குற்றஞ் செய்ததாக தீர்மானித்து அன்னவருக்கு ரூபாய் ஐம்பது அபராதம் விதித்துமேற்படி அபராதத் தொகையைக் கட்டாவிட்டால் ஆறுவாரம் சாதாரணக்காவல் என்றும் தீர்ப்புச்செய்தார்.

அன்பர்களே! மனுதர்மசாஸ்திரத்தில், பிராமணனென்பவன்யாதுகுற்றஞ்செய்தாலும்தண்டிக்கப்படாமல்அதற்குப்பதிலாக மேன்மையாக உபசரிக்கப்படவேண்டு மென்றிருப்பதை ஆங்கில துரைத்தனமும் அங்கிகரித்திருந்தால் சுமார் 30 கோடி இந்திய மக்களின் கதி என்னமாய்த்தானிருக்குமென்பதையும் பிராமணர்கொடுமையும்அந்தஸ்தும்,எவ்வளவு அதிகரித்திருக்குமென்பதையும் இங்குசிறிது ஊன்றி யோசித்துப்பாருங்கள்.

இவ்வழக்கு விஷயமாக சகோதரத் துவமும சுயமரியாதை உணர்ச்சியும்கொண்டு பொருள்வழங்கியும் ஒத்தாசை புரிந்தும் சுயமரியாதையை நிலைக்கச்செய்வதற்காக முன்வந்த பார்ப்பனரல்லாதருண்வாளர்களுக்கும் மகமதியகனவான்களுக்கும் கிறிஸ்துவ அன்பர்களுக்கும்ஆதிதிராவிட சகோதரருக்கும் சென்னையிலிருந்துவந்துபற்பல கஷ்டநஷ்டங்களைப்பொருட்படுத்தாமல் கோர்ட்டில்ஆஜராகிகேஸை ஜயம்பெற நடத்திக் கொடுத்த வக்கீல் திரு. எஸ். எம். ஞானப்பிரகாசம் B. A. B. L. அவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் சார்பாக வந்தனத்தையும் வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். சி. எஸ். பொன்னுசாமி.

## நெற்பயிரும் ரசாயன எருவும்

தானியப்பயிர்களில், நெற்பயிர் சென்னை ராஜதானியில் ஏராளமாய் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. இப்பயிரை லாபகரமாய் விளைவிப்பதற்கு உபயோகமான உரங்களில்,நைட்ரேட் சோடா என்னும்உரத்தைப்பற்றி இந்த வியாசத்தில் எழுதலானேம்.

எல்லா நிலங்களிலும் முக்கியசாரங்கள் மூன்று. அவை நைட்ரோஜன், பாஸ்பாரிக் ஆசிட், பொடாஷ் என்பவை. இந்த சாரங்கள் பூமியிலிருந்து ரொம்பவும் செலவாகின்றது. மேலும் நம் சென்னை பூமிகளில் தழைசத்தாகிய நைட்ரஜனும் விதைக்கு வலிவைக்கொடுக்கும் சத்தாகிய பாஸ்பாரிக் ஆசிட்டும்ரொம்பவும்குறைவாயிருக்கின்றன. இந்த ஸ்திதிக்குக் காரணம் நாம்பயிரிடும் முறையே. அதாவது, பருத்தி, புகையிலை கரும்பு நிலக்கடலை முதலிய பணப்பயிர்களுக்கு ஏராளமான நிலத்தை விடுவதால் தானியப்பயிர்களுக்காக விடும் நிலமானது ரொம்பவும் குறைந்துவிடுகின்றது. மேற்கூறிய காரணம்பற்றி, பூமியின் சாரங்கள் ஏராளமாய் குறைந்துபோகிறது. நைட்ரேட் சோடா என்னும் உப்பையும், சூபர் என்ற சூரணத்தையும் பயிர்களுக்கு வருஷா வருஷம் உபயோகித்துவந்தால் பூமியின்சாரங்கள் அதிகமாய்ச் செலவழிந்து போகாமலிருப்பதுடன்பிரதிவருஷம்நல்லமாசூல் அடையலாம்.

நெற்பயிர் ஈரோடுதாலூகாவில் ஏராளமாய் பயிரிடப்பட்டு வருகிறது. கொளிஞ்சி, குப்பை முதலிய இயற்கை எருவை ஏராளமாய்க் குடியானவர்கள் உபயோகித்துவருகிறுர்கள். அவைகளில் உள்ள தழை சத்தாகிய நைட்ரோஜன், நெற்பயிருக்குப் போதுமானதல்ல. நைட்ரேட் சோடா என்ற இரசாயன உப்பில் நூற்றுக்கு 15 பங்கு தழைசத்து இருப்பதால், தகுந்தபடி உபயோகித்தால் அந்த சத்தானது நெற்பயிருக்கு முதல்தரமான உணவுப் பொருளாகின்றது. எல்லா உரங்களும பூமியில் அழுகி "நைட்ரேட்" என்று சொல்லப்படும் சாரமாய் மாறுவதற்கு வெகு நாளாகிறது. ஆனல், சோடா நைட்ரேட் என்ற உரத்தில் தழைசத்தாகிய நைடரோஜன் நைட்ரேட் என்ற தன்மையில் இருப்பதால் பயிருக்கு உடனே உபயோகமாகின்றது. இளம்பயிர்களுக் குண்டாகும் வியாதிகளை அறவே ஒழிகின்றது.

விதை நெல் போடுவதற்கு முன் இந்த உப்பை நாற்றங்காலில் மணல், அல்லது எருவுடன் கலந்து உபயோகிக்கலாம். நாற்றங்காலில் பயிர் வேர்படிந்தவுடன் உபயோகித்துவந்தால், நாற்றங்கால் பயிருக்கு வலுவைக் கொடுத்து உழுத பூமியில் நடும்போது ஒற்றை அல்லது இரட்டை நாற்றுகளாய் நடலாம். பூமியில் வேர்படிந்தவுடன் அதாவது நாற்றுவிட்டு இரண்டு வாரத்திற்குப் பிறகு மணலுடனுவது குப்பையுடனுவது கலந்து உபயோகிக்கலாம்.

R ராஜமய்யங்கார்

## 'திராவிடன் நிதி'

### சென்னை மாகாண பார்ப்பனரல்லாதாருக்கு ஓர்வேண்டுகோள்

நமது மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்துக்காக மிகவும் ஊக்கத்துடன் உழைத்துவரும் பத்திரிகைகள "திராவிடன்" என்ற தினசரியும் "குடி அரசு" என்ற வாரப்பத்திரிகையும் என்பது பத்திரிகை உலகம் அறிந்ததே- நாம் நானூறு லட்சம் ஜனத்தொகை யுள்ளவர்களாயிருந்தும் நம்மிடை பனிஸ்ராயிரம் 'திராவிடன்' 'குடி அரசு' பத்திரிகைகளே உலவுகின்றன என்பதைக் கேட்க பார்ப்பனரல்லாதார் வெட்கப்பட வேண்டாமா? சுயமரியாதை அன்பர்களே! வீரர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் வரும் தீபாவளி தினத்தன்று வீடுவீடாக சென்று திராவிடனுக்கென்று பணம் வசூலித்து அதை "திராவிடன்நிதி"க்கு அனுப்புங்கள்- கிராமங்கள்தோறும் போய் சுயமரியாதை இயக்கத்தைப் பரவச்செய்யுங்கள்- வாலிபர்களே, இந்த சேவையாவது நம் தேசத்திற்கு நாம் செய்யப்படாதா? எவ்வளவோ பணம் வீணாக செலவாகின்றது- ஒருலட்சம் ரூபாய் வசூலிப்பது பெரிதா? முயற்சியும், ஊக்கமும், உள்ளன்பும்தான் வேண்டும்- தேசசேவைக்கு முன்வாருங்கள்- பத்திரிகைகளில் எழுதுவதுபோதாது, வெளிக்கிளம்புங்கள்- இதற்கெல்லாம் தலைவர்களை எதிர் பாராதீர்கள்- அவர்கள் தங்களாலியன்றதை செய்துவருகிறுர்கள்- நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள்.

விழிமின்! எழுமின்! ஓர் தொண்டன்

## தென்னிந்திய மருத்துவர் மூன்ருவது கான்பரன்ஸ்

### முதலாவது அறிக்கை.

அன்பு மிக்க மருத்துவ சகோதரர்களே!

தென்னிந்திய மருத்துவர் மூன்ருவது கான்பரன்ஸ் நடத்துவதற்குஏற்பாடுசெய்து திருநெல்வேலி ஜில்லா முழுவதிலும் தலைக்கட்டு வரிகள், நன்கொடைகள் வசூலிப்பதற்கும் மகாநாடு விஷயமாய் பிரசாரம் செய்வதற்கும் திருச்செந்தூர் மடம்டிரஸ்டி மெம்பர்களையும், பாபநாச மடம் டிரஸ்டி மெம்பர்களையும் தச்சநல்லூர் திரு மு குலசேகரம் பண்டிதர் அவர்களையும்,திருநெல்வேலி திரு தி.முத்துசாமி பண்டிதரையும், சேர்மாதேவி திரு மு. வேலு வைத்தியரையும், திரு வ. மு. சுவாமி பிள்ளையையும் நியமித்திருக்கிறது. மகாநாட்டு விஷயமாய் யோசனை சொல்பவர்கள் "திராவிடன்" "குடி அரசு" பத்திரிகை மூலமாய் தெரிவித்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப் படுகிறுர்கள். மகா நாட்டுத் தலைவர் இடம்,காலம் முதலியவைகள் விரைவில் அறிவிக்கப்படும். மகாநாடு சம்பந்தமாய் கடிதங்கள் மணிஆர்டர்கள் அனுப்புகிறவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்பும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

டாக்டர், எம். பி. சங்கரசுப்பு பிள்ளை
ரிட்டயர்ட் டாக்டர்,
பத்தமடை, (சேர்மாதேவி வழி.)

## புத்தக வரவு

1- ஒட்டக்கூத்தர் வரலாறு:—

பொய்யாமொழி, இரட்டையர், படிக்காசு, அருணகிரி நாதர்முதலிய புலவர்களின் வரலாறுகளை தொகுத்தவரும், தொண்டைமண்டல சதகப் பதிப்பாளருமான கோயமுத்தூர் திருவாளர் சி. கு. நாராயண சாமி முதலியார் அவர்களால்தொகுக்கப்பட்டது. ஆராய்ச்சியுடன் கூடியது. 220 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1-0-0. மதுரை புஸ்தக வியாபாரம் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் அவர்களிடம் கிடைக்கும்'

2- ஆதங்க நிக்ரக ஔதாலய வரலாறு:—போஷகர்கள், உரிமையாளர்கள், பச்சிலைமூலிகைகள் பயிர்செய்யும் தோட்டங்கள், ஔஷதாதிகள் செய்யும் ரசாயனச்சாலைகள், காரியாலயங்கள், கிளைக்காரியாலயங்கள், முதலியவைகளின் ஆப்டோன் படங்களும, ஔஷதாலயத்தின் பிறப்புவளர்ப்பு முதலிய வரலாறுகளும் கொண்டது-ஷை வரலாற்றிலிருந்து ஷை ஔஷதாலயம் பிணியாளிகளுக்கோர் புகலிடமாயிருக்கின்றதென்று தெரிகின்றது.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கங்களும் ஒவ்வொருவருக்கும் குறைவறக் கொடுக்க முடியும்.

இத்தகைய வழிகளால் குற்றங்களையும் குறைகளையும் உலகத்தை விட்டு விரட்டி விடலாம். பயமாகிய பேயையும், மூடநம்பிக்கையாகிய பிசாசையும் உலகத்தை விட்டகற்றி விடலாம். ஒவ்வொரு மனிதனையும அறிவுள்ளவனாகவும யோக்கியமுள்ளவனாகவும் செய்து விடலாம்.

"கடவுள்" தனது சிம்மாசனத்திலிருந்து இறங்கி விடுவார். நரகம் இல்லா தொழிந்து போகும். வேஷதாரிகளெல்லாம் உண்மையானவர்களாகி விடுவார்கள். மதம் பயத்தைப் பரப்பாது, பொய் நல்ல குணமாகவிருக்காது. தெய்வீகம் பொருந்திய செயல்கள் ஒன்று மிருக்காது. ஒவ்வொரு மனிதனும் கடவுளாகிய கல்லை நேசிப்பதை விட உயிருள்ள மனிதனை நேசிக்கத் தொடங்குவான். இவ்வுலக வாழ்க்கைக்காகவே மனிதன் ஒவ்வொரு செயலையும் செய்வான்.

சுதந்திரத்துக்கு விரோதமாக பேசப்படும் பேச்சையும் சுயமரியாதைக்கு விரோதமாக செய்யப்படும் தர்க்கத்தையும் என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

## பார்ப்பனீயம் ஒழிந்த சடங்குகள்.

[1] ஈரோடு கச்சேரி வீதியில் ஹோட்டல் வைத்திருக்கும் திருவாளர் மு. முத்துநாயுடு அவர்கள் தமது தகப்பனாரின் திதி சடங்கை பார்ப்பனீயமும் புரோகிதமுமின்றி சுயமரியாதையின்படி 10-10-28-ல் பந்து மித்திரர்களுக்கு விருந்திட்டு சிறப்பித்தார்-

[2]' திண்டுக்கல் ஷண்முகம் கதர்ஸ்டோர் புரோப்ரைட்டர் திரு- A S முருகேசம் பிள்ளையவர்கள் 10—10—28-தேதி புதன் கிழமை தன்னருமைத் தாயாரின் திதியின் ஞாபகார்த்தத்தை முன்னிட்டு யாதொரு சடங்கும் செய்யாமல் தன் சக்திக்கு தக்கவாறு ஏழைகளுக்கும் பந்து மித்திரர்களுக்கும் அறுசுவை அன்னமளித்தார்.

[3] திருநெல்வேலி ஜில்லா பணகுடி உபர் திரு மு. கா. திரவியம் பிள்ளை மு. கா. பரமசிவன் பிள்ளை இருவரும் 15 வருஷகாலமாக பார்ப்பனரைகொண்டு நடத்திவந்த தங்கள் ஆருயிர் மாதாவின் வருஷதிதியை நாளது வருஷம் புரட்டாசிமாதம் 23 தேதி திங்கட்கிழமையன்று பார்ப்பனரை ஒழித்து பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் உணவளித்து முடித்தார்கள்.

[4] நாகபட்டணம் ச. பக்கிரிசாமிபிள்ளை சமுசாரமாகிய காலஞ்சென்ற கிருஷ்ணம்மாளுக்கு நாளது புரட்டாசி மாதம் 5 தேதி குருவாரத்தன்று ஷை அம்மாள் மகன் நடராஜனைக்கொண்டு நிறைவுவிழாநடத்தப்பட்டது. நண்பர்களுக்கும் ஏழைமக்களுக்கும் விருந்திடப்பட்டது.

3- காரைக்குடி நலஉரிமைத் தோண்டர்சங்க அறிக்கை:—

கைத்தொழில், கல்வி, ஜீவகாருண்யம் முதலியவைகளைப் பேணல், மதுவருந்தல், தீண்டாமை, பிறவியில் உயர்வு தாழ்வு முதலிய மூட நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் ஒழித்தல் ஆகிய நோக்கங்களை பத்திரிகைவாயிலாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும், வாசகசாலை மூலமாகவும் ஷை சங்கம் ஒருவருடகாலமாய் பரப்பி தொண்டு புரிந்துவருவதாக ஷை அறிக்கையிலிருந்து தெரிகிறது. இச்சங்கம் மேன்மேலும் செழித்தோங்குக.

உடுமலைப்பேட்டை

## டி. மு. கோர்ட்டு.

1928-௵ அ நெ 718

ராமநாதஞ் செட்டியார்—வாதி.

பொள்ளாச்சி தாலூகா தளவாய்பாளையம் மஜரா கரட்டுப்பாளையத்திலிருக்கும் செல்லப்ப கவுண்டர் மகன் மொ. கருப்ப கவுண்டர்—பிரதிவாதி.

ஷை பிரதிவாதிக்குத் தெரிவிக்கிற நோட்டீஸ். ஷை நெம்பரில் வாதி பிராம்சரி நோட்டுப்படி ரூபாய் 1595—8—0ம் பின் வட்டியும் செலவும் வரவேணுமாய் பிராது செய்து விசாரணைக்காக 18—10—28ல் விசாரணைக்காக வாய்தா போட்டிருக்கிறது. ஆக்ஷேபனையிருந்தால் ஷை தேதியில் ஷை கோர்ட்டில் ஆஜராகித் தெரிவித்துக்கொள்ளவேண்டியது- இல்லாவிட்டால் ஒரு கக்ஷியாய்த் தீர்ப்பாகிவிடும்-

10—10—28 உடுமலைப்பேட்டை. } வாதி வக்கீல், A. முத்தையா பிள்ளை, பி ஏ பி எல்

உடுமலைப்பேட்டை

## டி. மு. கோர்ட்டு.

1928-௵ அ- நெ- 805-

சோமசுந்திரம் செட்டியார்—வாதி.

பெத்தபெருமாள் பிள்ளை—ஏஜண்டு-

பொள்ளாச்சி தாலூகா, மார்சுநாயக்கன் பாளையம் மஜரா, ஆலாங்கடவிலிருக்கும், மம்மத்கான் சாயபு மகன் உசேன்கான் சாயபு—பிரதிவாதி.

ஷை பிரதிவாதிக்குத் தெரிவிக்கிற நோட்டீஸ்- ஷை கோர்ட்டில் ஷை நெம்பரில் வாதி உம்மபேரில் பிராம்சரி நோட்டுப்படி ரூபாய் 1128—8—0ம் பின் வட்டியும் செலவும் வரவேணுமாய் வியாஜ்ஜியம் செய்து விசாரணைக்காக 22—10—28-உயில் வாய்தா போடப்பட்டிருக்கிறது- ஷை 22தேதி காலை 10 மணிக்கு நீர் ஷை கோர்ட்டு முன்பாக ஆஜராகவேண்டியது- தவறினால் உம்மபேரில் ஒரு கக்ஷித்தீர்ப்பாகிவிடும் என்ற விபரம் அறியவும்--

உடுமலைப்பேட்டை, 10—10—28 } வாதி வக்கீல் A- முத்தையா பிள்ளை, பி ஏ, பி எல்.

80 வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

அஸல் ஷண்முகம் பட்டணம் பொடி.

காரம், மணம், நிறம், வாசனை, குணம் அமைந்துள்ளது. எங்கள் உலகடிரேட்மார்க் பார்த்துவாங்குங்கள்.

(V. 120) ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட், போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

## சங்ககிரி தாலூகா போர்டு

இம்மகுடமிட்டு ஒரு பத்திரிகையில் சில விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. அது யாரால் எழுதப்பட்டுள்ளதென்பது தெளிவாய்ப் புலப்படவில்லை. காற்றில் உலவும் கட்டுரையைக் கேட்டு பத்திரிகாசிரியராலேயே எழுதப்பட்டதோ? (அப்படியிருப்பின் பொறுப்பு வாய்ந்த ஆசிரியர் விஷயத்தைத் தீர ஆராய்ந்துபாராது அவசரத்துடன் வெளியிட்டமைக்குப் பெரிதும் வருந்துகிறேன்) அல்லது, காலஞ்சென்ற ஸ்ரீமான் கைலாச கவுண்டர் காலத்து தாங்கள் இட்டதே சட்டமாய் பல பக்கத்திலுள்ள உபாத்தியாயர்களை துன்புறுத்தி அதனால் தாங்கள் தக்க வூதியத்தை அடைந்திருந்து தற்பொழுது அத்தகைய எதேச்சாதிகாரத்துக்கு மார்க்கமில்லாது வருந்தும் குமாஸ்தாக்களோ அல்லது உபாத்தியாயர்களோ எழுதியிருக்கவேண்டும். அப்படியிருப்பின் இத்தகைய வெளியீடுகள் நூற்றுக்கணக்காய் எழுதினும் அவர்கள் முன்போல் கொள்ளையடிக்க கொஞ்சமும் அனுமதிக்கப்படார் என்பதைக் கருத்துள்ளிருத்துவாராக.

காலஞ் சென்ற ஸ்ரீமான் கைலாசகவுண்டரவர்கள் சுமார் 42 உபாத்தியாயர்களின் சம்பளத்தை உயர்வு செய்தது வாஸ்தவமே. சங்ககிரி தாலூகா போர்டில் பணநெருக்கடி அதிகமென்பதும் உபாத்தியாயர்களுக்கு 4, 5 மாத சம்பளம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் வளர்கின்ற ஓமம் நமமோடியவைவி உயர்வானத்தை மறைத்து நிறைகின்றதாம். இவ்வாறு தங்களைத்தாமே பெருமைப் படுத்திக் கூறுமக்கள் வேறு உலகிலுளரோ? இப்பாதநாடன்றி வேறெந்நாட்டிலும் இலரென்பது திண்ணம்.

தரைத்தேவர், பூசுரர் ஒருபொருட் பன்மொழி.

> "புரைமலி வேதம்போற்று பூசுரர்கள்
> புரிந்தவர்
> நலங்கொளா குதியினில் நிறைந்த
> விரைமலி தூபம் விசும்பினை மறைக்கும்"
> "பொய்யகமில்லாப்பூசுரர்வாழும் புறவம்மே"
> "பூசுரர் பொலிதரு பூந்தராய் நகர்"

பொய்யகம் நிறைந்த பூமியிலுள்ள தாங்களே தேவர்களென்று பறையடித்து ஏழை மக்களை அன்றும் இன்றும் என்றும் மயக்கிப் பொருள் பறித்துண்போர் தரைத்தேவராவரோ? கருணை மிகுந்து கனிந்த நெஞ்சோடு மக்களினிடுக்கணைக் களைபவரன்றோ பூசுரராவர். தாமே பிரம்மமென்றும் தமக்களிக்கும் பொருள் பிரம்மத்திற்களிப்பதாகுமென்றும் புராணங்களிலெழுதி வைத்து அதனை மொழிபெயர்த்த தமிழ்ப் புலவர்கள் அத்தகைய தகாத கூற்றைக் கூற்றென விலக்காமற் சிறந்த வொழுக்கமென்று கூறினமையால் பாமரர்கள் பாடுபட்டுத் தேடும் காசுகளையிழந்து வெறுங்கையினராகின்றனர். சமயம் பார்ப்பாரைக் கண்டு 'சாமி' யென்றழைக்கும் வழக்கம் இவ்வழிப்பிறந்த தன்றோ?

"யாங்களே கடவுளென்றிடும்பாதகத்தவரும்" என்றார் தாயுமானார். பாதகர்களே பக்தர்களென்று மதிக்குமாறு பிறந்ததென்னை? ஆங்கில ஆட்சியிலும் இத்தவறொழுக்கம் நிலைத்துவருகின்றதே! தமிழ் மக்கள் புதிய இயக்கப்பலனுகவுண்மைதெரிந்து தெளிவெய்தி வஞ்சகவழியில் உய்யுமக்களை நெஞ்சகம் புகாமல் தம்மகம் வாராமலொழிப்பாராயின் இந்நாட்டிற்கு நற்காலம் பிறக்கும். எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

---

கொடுக்கப்படாமல் நிலுவையிலிருந்து வந்ததும் யாவருக்கும் தெரிந்திருக்கலாம். போர்டின் பண நிர்வாக விஷயம் இவ்வளவிலிருக்க 42 உபாத்தியாயர்களுக்கு மட்டிலும் அதுவும் அவர்களது சர்வீஸ் யோக்கியதை முதலியவற்றைக் கவனியாது உயர்வு சம்பளம் கொடுத்திருப்பது நீதியல்லவென்று புலப்பட்டமையின் அது விஷயம் 14-9-28 ல் நடந்த மீட்டிங்குக்கு கொண்டுவரப்பட்டு உயர்வு சம்பளத்தை 1-6-28 முதல் நிறுத்தும்படிக்கும் இதுவரை அதாவது 1-1-26 முதல் 1-5-28 வரை உயர்வு சம்பளமாகப் பெற்ற தொகையை வாபீஸ் வாங்க வேண்டுமென்றும் போர்டாரால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. இந்த 42 பேரை விட சர்வீஸிலும் யோக்கியதையிலும் மிகுந்தவர் அனேகரிருக்க போர்டில் உபாத்தியாயர்களுக்கு 5, 6 மாத பாக்கி சம்பளம் கொடுக்க பணமில்லாது தவிக்கும் தருணத்தில் இவர்களுக்கு மட்டும் சம்பள உயர்வு கொடுத்தது ஒழுங்கன்றென நன்கு புலப்பட்டமையின் இவ்வாறு செய்யத்துணிந்தோம்.

இது நிற்க, குமாஸ்தாக்களை துன்புறுத்துவதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. எப்பொழுதும் ஆபீஸில் உட்கார்ந்து வேலையே செய்வது அறியாத உபாத்தியாயர்களையே துரத்திக் கொண்டு தமாஷாய் காலம் போக்கி வந்த சில குமாஸ்தாக்களுக்கு, அமர்ந்து வேலை செய்யும்படி வற்புறுத்தப்பட்டால் அது துன்புறுத்துவதாகத்தான் தோன்றும். அதற்கு நாம் என் செய்யலாம். அவரவர்கள் கடமையைச் சரிவரச் செய்தால் யாரும் துன்பத்திற்குள்ளாக வேண்டியதில்லை என்பதை அழுத்தமாய்த் தெரிவிக்கிறேன். "எலக்ஷனில் மேற்படி இன்கிரிமெண்டு பெற்ற உபாத்தியாயர்களும் துன்புறுத்தப்படும் குமாஸ்தாக்களும்வேலை செய்து வந்ததற்காக தாலூகா போர்டு தலைவர்கள் இம்மாதிரி செய்வது வருந்தத்தக்கது" எனக்கூறப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு ஓட்டரையும் நேரில் கண்டு பன்முறையும் கேட்டு ஓட்டு பெறும் இந்த எலக்ஷனில் இந்த உபாத்தியாயர்களாலும் குமாஸ்தாக்களாலும் யாது செய்ய இயலும் என்பதையும், அப்படியிருந்தாலும் அவர்களைத் துன்புறுத்துவது நியாயமாகுமா, அப்படி துன்புறுத்துவார்களா என்பதையும் வாசகர்களே யோசிக்க வேண்டுகின்றேன். யாவர் எப்படி நினைப்பினும் நினைக்கலாம். உண்மை இன்னதென்பதை வெளியிட்டுள்ளேன். மனசாக்ஷிக்கு விரோதமில்லாது நடக்க வேண்டி எது ஒழுங்கும் ஞாயமுமாகுமென்பதை தீர யோசித்து பின்னரே ஒரு காரியத்தைச் செய்து வருகிறோம். இது விஷயத்தில் யார் எவ்வாறு கூறினாலும் பத்திரிகைளில் எழுதினாலும் பின்வாங்கோம் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என். செங்கோட்டுவேலு கவுண்டர்.
பிரஸிடெண்டு.

---

## செக்கண்டரி எஜுகேஷன் போர்டு தஞ்சாவூர் ஜில்லா,

வருகிற 1929 ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதிக்கு முன் நடக்கப் போகிற தஞ்சை ஜில்லா செகண்டரி எஜுகேஷன் போர்டு எலக்ஷனில் ஜில்லாவிலுள்ள எல்லாப்பள்ளிக்கூடங்களின் உதவி ஆசிரியர்களுக்காக ஏற்பட்ட ஒருஸ்தானத்திற்கு தாம் ஒரு அபேட்சகராக நிற்கப்போவதாக அய்யம்பேட்டை போர்டு ஹைஸ்கூல் இரண்டாவது கிரேட் உபாத்தியாயர் டி. எஸ். அருணாஜலம் பிள்ளையவர்கள் அறிவிக்கிறார்.

---

## ஓர் விதவைப்பெண் தேவை.

—0—

அத்திப்பாளையம் வாசியும், கோவைதாலூக்காவில் சுயமரியாதை பிரசாரம் செய்பவரும், சுயமரியாதை தொண்டரும் "குடி அரசு" பிறந்தநாள் முதற்கொண்டு சந்தாதாரராக இருப்பவரும், நான்கு ஆண்டுகளாக வெளிவந்த எல்லா "குடி அரசு" (ஸ்மிருதி) பத்திரிகைகளையும் பைண்ட் செய்து புத்தக ரூபமாய் வைத்துக்கொண்டு எல்லாப்பாமரமக்களுக்கும் உபதேசம் செய்பவரும், இவ்வூரில் மளிகைவைத்திருப்பவரும், ஒத்துழையாக்காலத்தில் மதுவிலக்குப் பிரசாரஞ்செய்தவரும், ஆங்கிலம், தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளைக் கற்றவருமான R. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஓர் விதவை இளம்பெண்ணை மணம்புரிந்துகொள்ள நிச்சயித்திருக்கிறார். அவருக்கு வயது இருபத்தேழு. சுயமரியாதைத் தொண்டைக்கருதி இதுகாள்பரியந்தம் மணம்புரிந்துகொள்ளவில்லை. ஷியார் கம்மவார்நாயுடு குலத்தைச் சேர்ந்தவர். ஷியார் எந்த ஜாதிப்பெண்ணையும் மணம்புரிய மூழுவிருப்பமே. நம் நாட்டின் விதவை இளம்பெண்களின் நிலையை யுன்னியே விதவைப் பெண்ணையே விவாகம் செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறார். பெண்ணின் வயது இருபத்தைந்துக்கு உள்பட்டிருத்தல்வேண்டும். பெண் சுமாரான அழகுள்ளவளாகவும், கொஞ்சம் படித்தவளாயும் இருக்கவேண்டும். அதிலும் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி தெரிந்திருப்பவளாயிருந்தால் அதிக சந்தோஷமே. மற்ற எல்லா விபரங்களுக்கும் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதித் தெரிந்து கொள்ளலாம்.

K. கோவிந்தசாமி நாயுடு, மளிகை
அத்திப்பாளையம்
பெரியநாயக்கன்பாளையம் போஸ்ட்,
கோயமுத்தூர் தாலூக்கா

---

## திருச்சி ஜில்லா பார்க்கவகுலச் சங்க அழைப்பு

மஞ்சத்திடல் இரயில்வே ஸ்டேஷனுக்கருகாமையிலுள்ள மேற்கத்கண்டார்கோட்டை கிராமத்தில் இம்மாதம் 14-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை நமது ஜில்லா சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று கூடும். வருடாந்தர முதல் கூட்டமாயிருப்பதோடு, பல முக்கிய விஷயங்களைப் பற்றியும்

1. புது ஆண்டுக்கு சங்கத்தின் ஆலோசனைப்பஞ்சாயத்தை நியமித்தல். 2. வேலைக் கமிட்டி ஒன்றைத்தேர்தல்செய்தல். 3. அமைப்பு விதிகள் பிரசார வேலை திட்டங்கள் முதலியன குறித்து தக்க முடிவுகாணல். 4. அங்கத்தினர்களால் கொணரப்பெறும் ஏனைய முக்கிய விஷயங்களைப்பற்றிஆலோசித்தல் ஆகியவிஷயங்களைக்குறித்தும் கவனிக்கப்படுமாதலால் குலப்பிரமுகர்கள் அனைவரும் விஜயம் செய்ய வேண்டுகிறேன்.

காரியதரிசி.

# வெள்ளி நகைகள்.

சுத்தமான வெள்ளி! நேர்த்தியான வேலை !!

நம்மிடம் அரைஞாண், முடிச்சுகுத்திக்கொடி, முகப்பு போட்ட கொடி, சாதா செயின் கொலுசு, முத்துசெயின் கொலுசு, டைமண்ட்பட்டை செதுக்கிய செயின் கொலுசு, புதுச்சேரி கொலுசு, மாங்காய் பட்டை கொலுசு, கடகம், கால் தண்டை, மயிர் மாட்டி, அரும்பு சங்கிலி, சாவி கொத்து, போல் காப்பு, சலங்கை இன்னும் பலவித வெள்ளி நகைகளும், கடுக்கன், கம்மல், தோடு, மூக்குத்தி, மோதிரம் முதலிய கல் நகைகளும் தயாராகி வியாபாரிகளுக்கு மொத்தமாயும் விலை சரசமாயும் அனுப்பப்படுகின்றன. ஒரு முறை ஆர்டர் செய்து பாருங்கள். மற்ற விபரங்களுக்கு லெட்டர் எழுதுக.

B. N. கெங்காராமய்யர்,

[illegible] நகை வியாபாரம், செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. India)





நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய காண்பரன்ஸ்களில் முதல்தா தேவ ஔஷதங்களென முதல்தா தங்க மெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! மூப்பு சேர்ந்த மருந்துகள்.

தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவர்.
பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.
நீங்கள் என்றுமழியாத இளமைப் பருவத்தை
அடைய வேண்டுமானல்

## பழனி சி. எம். சாமி மகா வீரிய

# தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்.

தாதுபுஷ்டியில் இதற்கு நிகரானது ஒன்றுமேயில்லை. தீது தூர்க் கிருத்தியங்களால் இழந்த ஆண்மைத் தனத்தை வெகு சீக்கிரத்தில் மீட்டு தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், நபுஞ்சகம் முதலிய வியாதிகளை நீக்கி சந்தான விர்த்தியை உண்டாக்கும். ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை, பலக்குறைவு முதலிய நீங்கி அபார தாதுபுஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையை எழுதமுடியாது. இன்னும் மேற்படி தங்க பஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி, எம், வரதராஜப் பெருமாள்சாமி, கவிராயர், பொள்ளாச்சி.

## குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேகபுஷ்டியையும் தரும். சகல மேகமும் ஐயரோசமும் நீங்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி:—நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது தங்களுடைய குரு அப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று. இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்த் தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குரு அப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பக் கோருகிறேன். கா. முகமது அப்துல்காதர், காரைக்கால். 21-12-26

## குரு தாளகபஸ்பம்–இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ. 16.

நற்சாட்சி:—தங்கள் குருதாளக பஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி, இளைப்பு இவைகள் குணமாயிருக்கின்றது. ஆர். கந்தையா, கேட்டில் டாக்டர், பாயிண்டு பீட்ரோ, சிலோன். 18-9-25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

## சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை, பழனி S. I.


அறிவு என்றைக்கு அடிமைப்பட்டதோ,
அன்றே உடலும் அடிமைப் பட்டுவிட்டது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நீந்தப் பழகினலல்லாமல் அதைப்பற்றி ஒருமனிதன் எவ்வளவு படித்தாலும் நீந்தக் கற்றுக்கொள்ள முடியாது. அது போலவே 'பர்தா' வழக்கத்திலிருக்கும் மாதர்கட்கு எவ்வளவு சட்டங்களும் விதிகளும் செய்தாலும் அவை அப்பழக்கத்தை மாற்றும்படி செய்யாது. அவர்கள் கல்வி அறிவு பெற்று விட்டார்களானால் அவர்களை 'பர்தா' முறையில் வைத்திருக்க முடியாது. முஸ்லீம்கட்குள் பெண் கல்வியே தான் அதிக சிக்கலான பிரச்சினையாய் இருக்கின்றது. இதைப் பற்றியே தான் எல்லோரும் கவல்கின்றனர். பர்தாவை ஒழித்து விடுங்கள், எல்லாம் சௌகரியமாய் போய்விடும்.

'கடைசியாக இம்முக்கியமான விடயத்தில் முதன்மையாக நிற்குமாறு எனது பஞ்சாப் சகோதரிகளை வேண்டிக் கொள்ளுகின்றேன். இந்தியாவில் எல்லாம் பஞ்சாப் முஸ்லீம்களே முற்போக்குடையவர்கள். அவர்கள் தைரியமாய் முன் வந்து தங்கட்குச் சார்பாய் பொது மக்கள் அபிப்பிராயத்தைத் திருப்பினால் மற்றைய மாகாணங்களும் அவர்களைப்பின் பற்றுமென்பது திண்ணம்.

---

## அறிவிப்பு.

"குடி அரசு" வாரப் பத்திரிகையின் மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வருட சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் மூன்று தான்.

வெளி நாடுகளுக்கு ரூபாய் நான்கு.

மானேஜர்.

---


'ரிவோல்ட்' 'ரிவோல்ட்'

# 'REVOLT'

"குடி அரசி"ன் கொள்கையைக் கொண்டு கூடிய சீக்கிரம் வாரம் ஒருமுறை வெளியாகும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 3 தான்.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

ஆசிரியர்.- "குடி அரசு" & "ரிவோல்ட்,"
ஈரோடு.



## பிளாக்குகள்.

புத்தகங்களுக்கு, விளம்பரங்களுக்கு, லேபில்களுக்கு, இன்னும் இதர அச்சுவேலைகளுக்கு வேண்டிய சகலவிதமான

லைன், ஆப்டோன்,
கலர்பிளாக்குகள்

35 வருஷ அனுபோகஸ்தரால் தயாரிக்கப்படுவது

உயர்ந்த வேலைப்பாடு,
திருப்திக்கு உத்தரவாதம்.

கொஞ்சகாலத்திற்கு சார்ஜுகள் வெகுவாய் குறைக்கப்பட்டிருக்கின்றன. கேட்லாக் இனும்.

ஜான் பிரான்கீஸ், சொந்தக்காரர்
பாஸ்டியன் ஸ்டுடியோ
173, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை.

### பார்ப்பனீயம் ஒழிந்த திதி

கோபிசெட்டிபாளையம் தாலூகா கொங்காபாளையத்திலிருக்கும் திருவாளர் ராஜாகவுண்டர் என்றழைக்கப்படுகிற K.N நஞ்சப்பகவுண்டர் குமாரன் திரு K.N பொன்னம்பலம் விபவ வருஷம் புரட்டாசித்திங்கள் 19 ம் நாள் வியாக்கிழமைதினம் தம்முடைய தாயார் திதிசடங்கை பார்ப்பனீயமும், புரோகிதமுமின்றி சுயமரியாதையின்படி பந்துமித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும் விருந்திட்டு சிறப்பித்தார்கள். உண்மை விளம்பி

---

### பார்ப்பனீயம் ஒழிந்த சடங்கு.

விபவவருஷ புரட்டாசிமீ 19உ திருச்சிக்கோட்டை ஜாபர்சாயபு தெருவு டி. சி. கோவிந்தராஜலு நாயுடு அவர்கள் தம் தம்பி சீனிவாசலுநாயுடு இறந்த முதலாவது ஆண்டுமுடிவில் 4-10-28 ல் போலிச்சடங்குகளை அறவேஒழித்து இறந்தவரின் ஞாபகார்த்தமாய் பந்துமித்திரர்களுக்கும் சில ஏழைகளுக்கும் உணவளித்தார். டி. ஆர். பாலுசாமி

### முத்துப்பேட்டையில்
### சுயமரியாதைச் சங்க ஸ்தாபனம்:

விபவ வருஷம் புரட்டாசி மாதம் 11 ந் தேதி புதன் கிழமை மாலை 6 மணிக்கு இவ்வூர் திரௌபதை அம்மன் கோவிலில் கிருமமுன்சிப் ஜனாப் கா. மு. முகம்மது ராவுத்தர் மரைக்காயர் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் கூட்டம் நடைபெற்று சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.


திருவாளர்கள் கி. வயி. சபாபதிச் செட்டியார் தலைவராகவும் த. மா. தருமலிங்க தேவர் உப தலைவராகவும் இ வயி. ராமசாமிசெட்டியார் பொக்கிஷதாராகவும் கோ. நடேசபிள்ளையும், ந. பொ. சுந்தரேசபிள்ளையும்காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிறகு சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு இரவு 9 மணிக்குக்கூட்டம் இனிதுகலைந்தது. காரியதரிசி.

---

### சைவ சித்தாந்த சபை
### ஸ்ரீ வில்லிபுத்தூர்.

சபையின் 14-வது ஆண்டு நிறைவு விழா கௌரவமிக்க சுகாதார மந்திரி எஸ் முத்தையா முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நாளிது அக்டோபர்மாதம் 20, 21 உ களில் நடைபெறும். அது சமயம் தமிழ் இலக்கியம், சமயம், தத்துவம் முதலிய அரிய பெரிய விஷயங்கள்பற்றி பல சொற்பொழிவுகள் நிகழும்.


பால்காயம் 12 தோலா ரூபா 1.
ரப்பர்ஸ்டாம்பு செட்டுடன் ரூ 2.




பித்தளை அரசுத சீல் ரூ. 1—0—0.
கேட்லாக்கு எழுதிக் கேட்கவும்.
போஸ்டேஜ் இனம்.

டி. ஜி. சுந்தரம் அண்டு கோ.,
கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதரூஸ்.



அநேக தங்க மேடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்ற டாக்டர் எஸ். பி மருந்துகள்.

## [ரூ. 1-8-0] அமிர்தரஸம். (Rs. 1-8-0)

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசராயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம் தான். துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம், வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

## அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குஷ்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி ஆரோக்கியத்துடன் கிரமமாய் மலப்பிரவர்த்தி செய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் கேட்லாக் பார்க்கவும்.

24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

## தங்கரேக் குளிகை

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்த உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்தது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0. 50 மாத்திரை ரூ. 8—8—0. வி. பி. வேறு.

தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனாபஜார், மதராஸ்,



ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க பதக்கங்களும் பரிசுபெற்று வருவது.

## குருநாத சஞ்சீவி எண்ணெ.

7-நாள் சாப்பிடக்கூடியது விலை ரூபாய் 3-0-0 தபால் சார்ஜ் வேறு

இந்த எண்ணெ முக்கியமாய் மூலவியாதி உள்ளவர்கள் சாப்பிட்டால் பூர்ணசுகமடையலாம்.

தீரும் வியாதிகள்.— மூலச்சூடு, வெட்டைச்சூடு, வெள்ளை, பவுத்திரம், மேக காங்கை, திரேக எரிச்சல், மலசிக்கல், வாய்ப்புண், நீர் எரிச்சல், முதலிய சகலவியாதிகளையும் உடனே கண்டிப்பதோடு, திரேகத்துக்கு குளிர்ச்சியை கொடுக்கும். பத்தியம இல்லை.

உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

ஆராத புண்களை 3 வேளையில் குணத்தைக் காட்டக்கூடிய,

## சித்த சர்வ ரணக் களிம்பு.

டப்பி விலை ரூபாய் 1-0-0 வி, பி. வேறு.

இந்தக் களிம்பை புண் இருக்கும் இடத்தில் காலை, மாலை இருவேளையும் தடவிக்கொண்டு வந்தால் 5-நாளையில் எவ்விதமான புண்களும் ஆறிவிடும் என்பது கை கண்டபலன்.

விலாசம் :— ராஜவைத்திய ஆஸ்ரமம்,
சேவ்வாய்பேட்டை, சேலம்.



## திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரி.

இந்தியாவிலே குறைந்த விலையுள்ள பனியன்கள் எங்களிடம்தான் கிடைக்கும். விலை 32 இஞ்சு கார்டிகன் டஜன் 1-க்கு ரூபா 3—8—0 தான்.
இன்னும் பலவிதமான பனியன் தினுசுகளும் கிடைக்கும்.
விலைவிபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.
எல்லா இடங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது நெருப்பிடலாகிய வன்னிமரத்தையே ஆத்மாவோடு கூடிய தேகமாகவும் அம்பை ஞானமாகவும் வேட்டையில் அம்பு விடுவதை ஞானோபதேசமாகவும் மரம் எரிந்து விழுவதை கருமசம்பந்தமானவைகளை ஞானத் தணல் சுட்டு வெண்ணீறாக்குவதாகவும் கொள்ள வேண்டு மென்பார்கள். இந்த உன் கருத்து உபதேசம் கேட்டுத்தான் ராஜவம்சமெல்லாம் நடுத்தெருவில் நின்றதான வடதேசத்துக் கதைகள் அநேகம். மைசூர் மகாராஜா பரிவேட்டையாடி ஐகருக்கு அடிமையானார். ஆனால் வெள்ளைக்காரப்பரிவேட்டை தான் அதை விடுவித்துக் கொடுத்தது. தஞ்சாவூர்ராஜா செய்த சரஸ்வதி பூஜையும் ஆடிய பரிவேட்டையும் சரஸ்வதி மாலில் அடுக்கி வைத்த குப்பைகூள ஏடுகளும் ஆயுதங்களும் முன் வாசலில் தூளியைக் கொட்டி விட்டு புறவடை வாயவில் ராஜாவை ஓடச் செய்து விட்டது. அது போலவே டிப்புகாலத்தில் திருவனந்த புரத்து ராஜாவிற்கு வெள்ளைக்காரர்கள் அபயம் கொடுத்தார்களே ஒழிய சரஸ்வதி பூஜையும் பரிவேட்டையும் ஒன்றும் செய்யவே இல்லை. அந்தப்படி அபயம் கொடுத்திராவிடில் அனந்த சயன பிரபுவும் அவர் பெண்ஜாதியும் அவர் மருமகளும் ஓடிப்போயல்லவோ இருக்கவேண்டும். அனந்த சயனப்பிரபு பின்னும் ஓடிவந்து தங்கள் சொந்தசென்று அங்கு சயனித்துக் கொண்டிருப்பதாக இப்பொழுதும் சொல்லுகிறார்கள் இந்த பிரத்தியக்ஷ அனுபோகத்தை 'குடி அரசு' சொன்னால் அது கடவுளை தூஷிக்கிற பத்திரிகையாய் விடுகிறது.


கடவுளையும் பெரியவர்களையும் தூஷிக்கிறவர்கள் 'குடி அரசு' காட்டும் ஆதாரங்களையும் அதன் நியாய வாதங்களையும் கூட்டி ஆலோசியுங்கள். அநேக ஆயிர வருடமாக சரஸ்வதி பூசை செய்யும் நாட்டில் 100 க்கு 3 பேர் கூட படிக்காமலிருந்ததற்கும் சரஸ்வதியே இன்னார் என்று தெரியாத நாட்டில் 100க்கு 90 பேர் படித்திருப்பதற்கும் காரண மென்ன? நாம் சரஸ்வதிக்கு செய்த தொண்டு சாமானியமல்லவே. ஒரு ஏட்டைக் கிழிக்கோம், ஒரு எழுத்தை மிதியோம், இறைந்து கிடக்கும் இதழில் துப்போம், படித்த ஒரு பழைய ஏட்டையும் வீசி எறியோம், கால் பட்டால் தொட்டுக் கும்பிடுவோம், கைபட்டால் கண்ணில் ஒத்திக் கொள்ளுவோம், எந்த ஏட்டிற்கும் காப்புச் சொல்லுவோம். செல்லரித்த ஏட்டையும் புண்ணிய தீர்த்தத்தில் கொண்டு போய் போடுவோமே ஒழிய தெருவில் போடோம், கற்றவர் நாவின் கருத்தும் கம்பன் கவித்திறமும் அவளே என்போம், இத்தனையும் பத்தாமல் வருஷம் ஒருதரம் பத்து நாள் பள்ளியறையில் வைத்து படைத்துக் கும்பிடவும் செய்கிறோம். இத்தனையும் நாம் இங்கு செய்ய இந்த சரஸ்வதி கொஞ்சமும் நன்றி விசுவாசம் இல்லாமல் மேனாட்டில் குடி புகுந்த காரணமென்ன வென்பதை 'குடி அரசு' சரஸ்வதியையே கேட்கட்டும். ஏ சரஸ்வதி! மேனாட்டில் உனக்கு என்ன மரியாதை இருக்கிறது? உன்னைப் படித்து எறிகிறார்கள், காலில் மிதிக்கிறார்கள், செருப்புக் கட்டுகிறார்கள், மலம் துடைக்கிறார்கள், உன் பேர் சொல்லுவதில்லை, நீ ஒருத்தி இருக்கின்றாய் என்று கூட நினைப்பதில்லை. உனக்கு பூசையில்லை, புருஷனில்லை, வீணையில்லை எல்லாவித்தைக்கும் அவர்கள் தாங்களே எஜமானர்கள் என்கிறார்கள், எனவே நீசெய்வது நியாயமாகுமா என்று நாங்கள் சொல்லிவிட்டால் உன்பாஷையான சமஸ்கிருத இலக்கணத்தை எங்களுக்குச்சொல்லிக் கொடுக்கப்படாதென்று நீசொன்னதாகச்சொல்லும் சாஸ்திரிகளே எங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லுகிறார்கள். உன் முதற்பிள்ளையான பாப்பார்களின் தாசிப்பிள்ளை,— அடிமை—வேலையாள்—ஒழுக்க மற்றவன்—என்று எங்களில் படித்த உணர்ச்சியற்ற பண்டிதர்களையும் கூட நீ சொல்லியிருப்பதாக உன் முதற்பிள்ளைகள் சொல்லும் ஏட்டைக்கூட கிழித்தெறியாமல் சற்றும் விஸ்வாசமற்றுப்போனாயே என்று நாங்கள் சொல்லிவிட்டால் தூஷித்தவர்களாகிவிடுவோமா? நீயே சொல்லு.

நீ வாசஞ்செய்யும் மேனாட்டில் உனக்கு பூசையில்லை, நைவேத்தியமில்லை, பூசாரிகுருக்களுக்குப் பொங்கச்சோறில்லை, பஞ்சமும்படியாமையுமுடைய இந்நாட்டின்பேரில் மாத்திரம் உனக்குவந்தவயிறெரிச்சலென்ன? உன் முதற்பிள்ளைகளுக் கெல்லாமஉன்பேராலேயே அளித்தளித்து ஆண்டிமாரானோமே என்று நாங்கள் சொல்லுவதாலேயே உன் பக்தகோடிகள் உன்புருஷனுடைய பிர்மலோகத்திற்கும் உன் மாமனுடைய வைகுண்டத்திற்கும் உன்பாட்டனும்மசனுமானசிவனுடையகைலாசத்திற்கும் போகும் கதவுகளை நாங்கள் (சமயதூஷணையால்) சாத்தினவர்களாகி விடுகிறோமாம். நீயும் உன்குடும்பத்துப்பெண்களும் குடிபோயிருக்கும் நாட்டில் உங்கள் புருஷர்களுக்கு கோவில் கிடையாது கும்பாபிஷேகமில்லை. அப்படியிருக்க நீங்களில்லாத நாட்டில் உங்களுக்கு கோயிலும் கும்பாபிஷேகமும் பூசையும் எதற்கு! இருக்கிற கோவில்களில் நீங்கள் குடியிருந்தால் போதாதா? காணிக்கையும் — நிறுத்தி கும்பாபிஷேகத்தையும்விட்டு கோவிலுக் கெழுதிவைப்பதையும் நிறுத்தி பணத்தையெல்லாம் படிப்பிற்கே வைத்து விட்டுப் போங்களென்றால், பாமரர்களுக்காக ஏற்பாடு செய்து வைத்தசமய ஒழுக்கங்களையெல்லாம் தடுத்து மோட்ச வாசலை அடைக்கும் நாசர்களென்று எங்களை ராஜீயவாதிகள்கூடச் சொல்லலாமா? ஆசாரிகளுக்கும் குருக்களுக்கும் அவரைச்சேர்ந்த பாப்பார்களுக்கும் கொடுப்பதை நிறுத்திவிட்டு பக்கத்து ஏழைக்கு படிப்பும் தொழிலும்கற்பியுங்களென்றால் ஆச்சாரிகளையும் பெரியவர்களையும் நாங்கள் குற்றம்சொல்லுகிறவர்களாகிவிடுவோமா? பட்டகசாலை தூணிலிருந்து அம்பட்டன்கத்தி வரையிலும் மேனாட்டிலிருந்து வந்தாலும் சகம் அறுக்கும் கத்திகூட ஐந்தனுவிற்குவாங்கி அநேகர் கொத்தசாவியில் தொங்குகிறதும் போகட்டும். அறுப்பறுக்கும் காலத்தில் கட்டாணையில் கருக்கருவாள்கூட கவலையற்று தூங்குகிறதே. வருணபகவானுக்கும் சூரிய பகவானுக்கும் ஏற்பட்ட சண்டையால் வருண பகவான் முறியடிக்கப்பட்டு ஓடிமறைந்துவிட்டானே, சூரியனே இப்போது கழனியில்உள்ள எல்லாவற்றையும்காய்ந்துகொலைத்துவிட்டானே உன் ஆயுதங்களுக்குகாட்டிலும் கழனியிலும்கூட வேலை இல்லையென்றால் பின்னை கருமார்வீட்டிலும் வேலைஎன்ன! எனவேவேலையிலா ஆயுதத்திற்குப்பூசைஏன்.?

தொடரும்.

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்கைக்கெடியாரங்கள்.




இதிர்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்ரவாதம். ரூ 4-15-0 வி. பி. வேறு

ஜினன் வாட்சு கம்பெனி

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

நூதனமாகக் கண்டுபிடித்துத் தயாரித்துவரும்



கை தையல் மிஷின்.

இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த நூதன மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் பணம் சம்பாதிக்க முடியும். இதனால் கை குட்டைகள், ஜாக்கெட்டுகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணிகளிலும் மல்துணிகளிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் செய்யலாம், நவராத்திரிககாகப் பெரிய பொம்மைகளுக்கு நன்கு அலங்காரம் செய்ய உதவும்.

உறுதியான மெஷின் ஐம்பதுவருஷமானாலும் கெடாது,

விலை ரூபாய் 4—15—0 தபால் செலவு இனாம்.

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி.

தபால் பெட்டி 119, மதராஸ்.

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்பு

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம். நேர்த்தியான அச்சு

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன்கூடியது.




இந்த எரோப்ளேன் டிரேட் மார்க்பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

## இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1 துறவிகளின் கதி என்ன
2 இல்வாழ்க்கை ஏன் சிறந்தது.
3 இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி.
4 இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5 பெண்ணின் பெருமை. பெண் கல்வி.
6 நாணம் எப்படி உண்டாயிற்று?
7 உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8 நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9 நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன.
10 இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்.
11 ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன. உண்மையான கலியாணம் எது.
12 காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13 இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14 மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15 கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16 தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17 ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18 அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19 பல ஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20 சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21 ருது வாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22 பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணம். இதைப் போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23 மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24 கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?
25 கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள்.
26 கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக் கூடிய வியாதிகள்.
27 அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.
28 முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29 ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30 புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது. இதைப் போக்கிக் கொள்வதெப்படி.

31 அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்கமுடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அபிப்பிராயங்கள் செய்கின்றனர்? சிசுக்கொலை அபிப்பிராயம்.

32 ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக்காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொருமை கொள்ளாமலிருக்கவேண்டுமானால் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.

33 தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா. தாசிகள் வீடுபோகும்நண்பர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சிலவார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான போன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0 0.

ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு எழுதினால் உள்நாட்டுக்கு தபால் செலவு இனாம்.

## வாஸன் புஸ்தகசாலை,

**244, தங்கசாலைத் தெரு, தபாற் பெட்டி நெ. 119 ஜி.டி. மதறாஸ்.**

## 'விஸ்வநேசன்'

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு
உழைத்துவரும் ஒரு
வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் பொதுவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர் திரு. கா. சுப்பண்ணாச்சாரி

இதன் வருட சந்தா ரூ 3—0—0
வெளிநாட்டுக்கு ரூ 4—0—0

விலாசம்:— மானேஜர்,
விஸ்வநேசன் காரியாலயம், ஈரோடு.

தீபாவளி! தீபாவளி!!

## நவீன கலர்புடவை.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட் கருப்பு, செகப்பு, ஸ்நப் கலர்கள், கெட்டிச் சாயம், கரையிலும், முந்தியிலும் பூவேலை மான முள்ள நூதன புடவை.

18 மு X 46 அங் புடவை ரூ. 4...14—0
ஷை கலர்களில் சாதா புடவை 4— 4—0

கைநிசவில் தயாரித்த உடல் செகப்பு, கருப்பு, பலமாதிரி புள்ளிகள் போட்ட ஜரிகை உத்திராட்சம் பேட்டுவைத்து 1 இஞ்சு ஜரிகை முந்தி போட்டது.

18 மு X 46 அங் புடவை 1க்கு ரூ. 7-0-0
ஷை ஜரிகை பெங்களூர் முந்தி போட்ட புடவை 1க்கு 7-12-0

6th Edition கேட்லாக் இனாம்.
The Madura Oriental Trading Co,
Laxmi Cloth Store, Madura (S. I.)

## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. தினுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி
புதுச்சேரி.

## கணித சோதிடம்.

பரிசுத்த கணிதப்படி கணிதஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதிஅனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி தாங்கள் எழுதிஅனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப்புருஷனும் புருஷனுக்குப்பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீகசோதிட நூற்களும்பலவுள்ளதால் நாங்கள் எழுதிஅனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார்பேட்டை, புதுச்சேரி.

64 — பக்கம் — 64

# ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதை சந்தா நேயர்களுக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாரராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆநந்த விகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்பட 1...0...0
வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ 1...4...0

மாதிரி காபி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244. தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்". டெலிபோன் நெ. 3311.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.


குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

## PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறுநூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போடோவின் அளவு $3\frac{1}{2}$x$2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.